# சிவகாமி அம்மன் பிரபந்தங்கள்

# சிவகாமி அம்மன் பிரபந்தங்கள்

பதிப்பாசிரியர் :

வித்துவான் சு. பாலசாரநாதன்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர் சென்னை-600 090.
1984

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| முகவுரை | ... | i—viii |
| சிவகாமி அம்மன் அகவல் | ... | 1—10 |
| சிவகாமி அம்மன் ஊசல் | ... | 11—14 |
| தில்லைச் சிவகாமி அம்மன் கலிவெண்பா | ... | 15—25 |
| சிவகாமி அம்மன் பேரில் தோத்திரம் | ... | 26—30 |
| சிவகாம வல்லி விருத்தம் | ... | 31—39 |

# முகவுரை

"கரும்பணையாள் என்னிரண்டு கண்களிலே இருந்தாள்
கற்பகப்பொன் வல்லிசிவ காமவல்லி யுடனே
விரும்புமணிப் பொதுவினிலே விளங்கியநின் வடிவை
வினையுடையேன் நினைக்கின்ற வேளையில்என் புகல்வேன்
இரும்பனைய மனம்நெகிழ்ந்து நெகிழ்ந்துருகி ஒருபேர்
இன்பமய மாகும்எனில் அன்பர்கண்ட காலம்
அரும்பிமலர்ந் திட்டசிவா னந்தஅநு பவத்தை
யாரறிவார் நீயறிவாய் அம்பலத்தெம் அரசே"

(வள்ளலார் பாடல் சௌந்தரமாலை)

பஞ்ச பூதத்தலங்களில் தில்லை ஆகாயத்தின் வடிவம். தில்லை இதயமாதலின் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழில்களும் நடராசப்பெருமானின் ஆனந்த தாண்டவத்தில் அடங்கியுள்ளன. பதஞ்சலி, பாணிநி, வியாக்கிரபாதர் முதலிய முனிவர்கள் முன்னிலையில் நடராசப் பெருமான் டமருகத்தைப் பதினான்கு தடவை அடித்து ஒலியை எழுப்பினார். அந்த ஒலியைக் கேட்டுப் பாணிநி என்பவர் பதினான்கு சூத்திரங்களை எழுதினார். இதுவே எழுத்துக்களின் தோற்றத்திற்கு ஆதிகாரணம்.

தில்லைக் கோயில் உபநிடதங்களில் குறிக்கப்பட்டுள்ளது. தில்லையின் பெருமையைத் திருமந்திரம், சைவத்திருமுறை, திருப்புகழ், அருட்பாக்கள், தேவாரம் முதலிய தமிழ் நூல்களும், வடமொழி நூல்களும் வானளவாகக் கூறுகின்றன. இங்கு இறைவனை உருவம், அருவம், அருவுருவம் என்ற மூன்றுவகையாலும் காணலாம். பிரமன், விஷ்ணு, சிவன் மூவரும் ஒரே இடத்தில் கோயில் கொண்டுள்ள திருத்தலம் இதுவே.

நடராசப்பெருமான் முதலில் ஒன்பது தடவையும் பின்பு ஐந்து தடவையும் ஆகப் பதினான்கு தடவை டமருகத்தை (உடுக்கை) அடித்தார். முதலில் ஒன்பது தடவை அடித்தது நவாக்கரி பின்பு ஐந்து தடவை அடித்தது பஞ்சாட்சரம்.

சிதம்பரம் நடராசப் பெருமானைப் பூசை செய்யும் தீக்ஷிதர்கள் நவாக்ஷரி, பஞ்சாக்ஷர மந்திரங்களை உபதேசம் பெற்றிருக்க வேண்டும்.

நடராசப் பெருமான் இடதுகாலைத் தூக்கி ஆடுவதன் காரணம் தேவியை வழிபட வேண்டும் என்பதைக் குறிப்பிடுகின்றது. நடராசப் பெருமானின் இடதுகால் அம்பிகையின் கால். சிவபெருமான் அர்த்தநாரீசுவரனல்லவா? இடதுகாலைத் தூக்கிக் காட்டுவதன் உட்கருத்து ஒவ்வொருவரும் பஞ்சதசி வித்யையை ஜபித்தல் வேண்டும் என்பதே. சிதம்பரம் ஸ்ரீவித்யைக்கு முக்கியமான தலம். வடமொழிப் புலவரான நீலகண்டதீக்ஷிதரும் தாம் இயற்றிய 'சிவகர்ணாமிருத'த்தில் நடராசப் பெருமானின் இடது காலுக்குத் தான் விசேடத்தன்மை உண்டு என்கிறார்.

பஞ்ச பூதங்களில் சித்சத்தியான அம்பிகை விளங்குகிறாள். முதலில் பிரம்மத்தினிடமிருந்து ஆகாயம் தோன்றியது. ஆனால் ஆகாயத்திற்கு உருவம் இல்லை. சப்தம் என்ற குணம் மட்டும் உண்டு. ஆகாயத்திலிருந்து உருவமற்ற வாயு தோற்றம்; வாயுவி லிருந்து உருவம் உள்ள அக்னி தோன்றியது. அக்னியிலிருந்து சப்தம், உணர்ச்சி, உருவம் தோன்றின. நீரிலிருந்து பூமி தோற்றம்; பூமியிலிருந்து ஓஷதிகள்; ஓஷதியிலிருந்து அன்னம்; அன்னத்திலிருந்து மனிதன்; இப்படி, பிரம்மம் நிர்க்குணமாக இருந்து தேய்ந்து ஆறு குணமுள்ள மனிதனாக ஆயிற்று. ஆகவே பிரம்மஞானம் பெற மனிதப் பிறவி இன்றியமையாதது. இந்தச் சித்சத்தி அம்பிகையின் ஸ்வரூபம் அறிய பஞ்சபூதங்களின் துணை மிகவும் அவசியம்.

சித் சத்தி ரூபமாக விளங்கும் அம்பிகை சப்தமயமாகவும், தத்துவ ரூபமாகவும் விளங்குகிறாள். அம்பிகை ஆனந்த வடிவமாக இருக்கிறாள். அம்பிகையை வழிபடுகின்றவர்களுக்குப் பிறவி என்பதில்லை. அம்பிகையை 'முத்தி ரூபிணி' என்று லலிதா சகஸ்ரநாமம் கூறுகின்றது. அபிராமி பட்டர் ''அழியா முத்தி ஆனந்தமே'' என்று கூறுகின்றார்.

அருணகிரிநாதர் ஐம்பத்தொன்று அட்சர மகிமையை உணர்ந்து கந்தரநுபூதியை ஐம்பத்தொன்று அட்சரங்களில் இயற்றியுள்ளார்.

''அகர முதலென வுரைசெய் ஐம்பத் தோரட்சரமும்'' என்று திருப்புகழ் கூறுகின்றது. ஐம்பத்தொன்று அட்சரங்களுக்கும் 51 ஆதி சத்தி பீடங்கள். ஆகவே ஐம்பத்தொன்று அட்சரங்களும் நடராசப் பெருமானுடைய உடுக்கை நாதத்திலிருந்து தோன்றியவை.

**மூர்த்திகளும் மண்டபங்களும் :-** கோயிலுக்கு நான்கு கோபுரங்கள்; நான்கு வாயில்கள். தெற்குக் கோபுரவாயிலாகச் சென்றால் ஸ்ரீ முக்குறுணி விநாயகர் சந்நிதி. உருவம் மிகப் பெரியது; சக்தி வாய்ந்தவர். **கற்பக விநாயகர் கோயில் :-** கற்பக விருக்ஷம் போல்

அடியார்களின் மனமறிந்து அருள வல்ல பெருமான் ஆதலின் கற்பக விநாயகர் எனப் பெயர் பெற்ருர்போலும். சண்முகர்கோயில், மீனுட்சி சுந்தரர் கோயில், ஒற்றைக்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், பஞ்ச மூர்த்தி தீர்த்த மண்டபம், அம்மன் கோயில், துர்க்கை கோயில், பாண்டிய நாயகர் கோயில், நவலிங்கம் கோயில், ஆயிரக்கால் மண்டபம், சிவகங்கை, ஐந்து சபைகள் முதலியன உள்ளன.

தில்லையில் வீற்றிருந்து கொண்டு அடியார்களுக்கு அருள் பாலிக்கும் சிவகாமி அம்மையின் கண்கள் அருட்சக்தி வாய்ந்தவை; அன்பர்களுக்கு எல்லா நலங்களும் தருபவை. அம்பிகையின் அருட் கண்களின் அழகில் குமரகுருபரர் பெரிதும் ஈடுபட்டுப் பின் வருமாறு புகழ்ந்து பாடுகின்ருர்.

''கறையரவுக் கஞ்சுரு தஞ்சுறூஉந் திங்கள்
இறைவி நறுநுதலைக் கண்டு — பிறைமுடியோன்
கைம்மா னடமுவந்த காற்புலிக்கஞ் சாதஞ்சும்
அம்மான் விழிமானைக் கண்டு''.

சிவபெருமான் தனது சடைமுடியில் திங்களும், பாம்பும் அணிந் துள்ளான். பாம்பைக் கண்டு அஞ்சுதல் திங்களுக்கு இயல்பா யினும் அஞ்சவில்லை சிவபெருமானின் சடைமுடியில் உள்ள காரணத்தால். இருந்தபோதிலும் அஞ்சாமலும் இல்லை. ஓர் அச்சம் தீர்ந்தாலும், சந்திரனுக்கு வேருெரு அச்சம் ஏற்படுகின்றது. சிவபெருமானின் அருகில் அம்பிகை வீற்றிருக்கின்ருள். அவளது நெற்றி மிக்க அழகு வாய்ந்ததாய், குறுகியதாய், வளைந்ததாய் இருக்கின்றது. அத்தகைய நெற்றியழகைக் கண்டதும் அவ்வழகும், சிறப்பும் தனக்கு இல்லையே என்று வருத்தமுற்றுத் திங்கள் நாண மடைந்து அஞ்சுகின்றது.

இத்திங்களைப்போலவே சிவபெருமானின் கையிலுள்ள மானும் நாணி அஞ்சி நிற்கிறது. மான் புலியைக்கண்டு அஞ்சுதல் இயல்பு. சிவபெருமான் கையில் உள்ளமான் வியாக்கிரபாத முனிவராகிய புலிக்குச் சிறிதும் அஞ்சவில்லை. ஆனுல் சிவகாமி அம்மையின் விழிகளாகிய மானைக்கண்டு அவற்றின் சிறப்புத் தனக்கு இல்லையே என்று நாணமடைந்து அச்சங்கொள்கின்றது. மானும் அஞ்சும் மாண்புடையனவாகச் சிவகாமி அம்மையின் திருக்கண்கள் திகழ் கின்றன.

தேனையுண்டு மகிழ்ச்சியடைகின்ற வண்டுகளைப்போலச் சிவகாமி அம்மையின் திருவிழிகள் விளங்குகின்றன என்று குமரகுருபரர் கூறுகின்ருர்.

"பொன்மன்றம் பொற்றா மரையொக்கு மம்மன்றில்
செம்ம றிருமேனி தேனொக்கு மத்தேனை
உண்டு களிக்குங் களிவண்டை யொக்குமே
எம்பெரு மாட்டி விழி".

பொன்னம்பலத்தில் ஐந்தொழில் நாடகம் நடத்துகின்ற நடராசப் பெருமானுக்கு எம் அன்னையாகிய சிவகாமி அம்மை ஒருத்தியே மனைவி, தாய், தங்கை, மகள் என்னும் பலநிலைகளில் விளங்குகின்றாள் என்று கூறுகின்றார் குமரகுருபரர்.

"கனகமார் கவின்செய் மன்றில்
அனகநாட கற்கெம் மன்னை
மனைவிதாய் தங்கை மகள்".

சிவகாமசுந்தரியாகிய ஒருமயில் பக்கத்தே இருக்கும்போது பாம்பினாலும், அதன் விடத்தாலும் சிறிதும் தீங்கு உண்டாகாது என்பதைக் குமரகுருபரர் கீழ்வரும் செய்யுளால் கூறுகின்றார்.

"கறைகொண்டு நச்சரவக் கச்சணிந்தா ரென்று
மறைகொண்டு வாழ்த்துவதும் வம்பே—இறைகொண்
டயிலிருக்கு முத்தலைவே லண்ணலுக்கென் னேயோர்
மயிலிருக்கத் தில்லை வனத்து".

மேலும் குமரகுருபரர் தாயே! "நின் திருவடித் தாமரைகள் கிடைக்கப் பெற்றால் பிரமபதவியும், திருமால் பதவியும் விரும்பமாட்டேன் என்கிறார்.

"மறைநாறுஞ் செவ்வாய் மடக்கிள்ளாய் பிள்ளைப்
பிறைநாறுஞ் சீறடியெம் பேதாய்—நறைநாறும்
நாட்கமலஞ் சூடே நறுந்துழாய் தேடேநின்
தாட்கமலஞ் சூடத் தரின்".

சிவபெருமான் திருமுடியிற் பிறையும், அம்பிகையின் திருமுடியிற் பிறை என்னும் தலைக்கலனும் விளங்குதல், இறைவர் அம்பிகைக்குத் தம் திருமேனியிற் பாதியளித்த காலத்தில் தாம் அணிந்த சந்திரனையும் பகிர்ந்து அளித்தார் போலும் என்று நினைக்கும்படி தோன்றுகின்றது என்று குமரகுருபரர் கூறுகின்றார்.

"நாகம் பொதிசடைமே னுண்மதியும்
வாண்மதிபோ னங்கை கங்குல்
மேகஞ்செய் கூந்தன் மிலைச்சுந்
தலைக்கலனும் விளங்குந் தோற்றம்
ஆகம் பகுந்தளித்த வந்நாளில் அம்பலத்தான்
மாகம் பதியு மதியும் பகுந்தளித்த
வண்ணம் போலும்".

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் சிவகாமி அம்மையே செய்கின்றதாகச் சிவகாமி யம்மன் தோத்திரம் எடுத்தியம்புகின்றது.

"ஐந்தொழிற் கொருவித்தா யனைத்தினையும்
படைத்துயிர்கட் கன்னை யாகிப்
பந்தமுறு காரணத்தி லொடுக்கியுநால்
வகைமாயைப் பணிந டாத்திச்
சந்ததமும் பேரருளாற் றவமாக்கித்
தனிமுத்தி சாரச் செய்து
சிந்தையினிற் பிரியாத சிவகாம
சவுந்தரியைச் சிந்தை செய்வாம்".

சிதம்பரத்தைச் சாமவேதீய சாந்தோக்கிய உபநிடதம் 'சத்' என்றும், 'சபா' என்றும், கிருஷ்ண யசுர்வேதீய சுவேதாசுவதரோபநிடதம் 'பரம்' என்றும், 'சத்தியம்' என்றும்; சுக்லயசுர்வேத பிரகதாரணிய உபநிடதம் 'மகத்' என்றும், கைவல்லியோபநிடதம் 'விவிக்தம்' என்றும்; அற்புதம் என்றும் சாந்தோக்கியம் 'புண்டரிகம்' என்றும், தைத்திரீயம் 'குகை' என்றும், 'ஞானனந்தம்' என்றும், 'பரம வியோமம்' என்றும், 'பரமாலயம்' என்றும், பிரகதாரணியம் 'சுத்தம்' என்றும், தலவகாரோபநிடதம் 'சத்தியமாயதனம்' என்றும் கூறுகின்றன.

தமிழ்க் காளிதாச கவியான காளமேகப் புலவர் சிதம்பரத்தில் சிறப்பாக உள்ளவையைப் பற்றிப் பின்வருமாறு கூறுகின்ருர்.

"ஞான சபைக னகசபைசிற் றம்பலம்பே
ரானந்தக் கூடந் திருமூலட்—டானம்பே
ரம்பலபஞ் சாவரண நாற்கோபு ரம்பொற்செய்
கம்பமண்ட பஞ்சிவகங் கை."

ஞானசபை - சிற்சபை (இதில் நடராசப் பெருமான் வீற்றிருக்கிருர்), கனகசபை - பொன்னம்பலம். இது சிற்சபைக்கு முன்ஞல் இருக்கிறது. சிற்றம்பலம் - நுட்பமாகிய அம்பலம் (இதில் நடராசப் பெருமான் அருவாய் இருக்கிருர்.) பேரானந்த கூடம் - பேரின்ப சபை. (நடராசர் ஊர்த்துவ தாண்டவஞ் செய்கிறதாக ஐதிஹ்யம்.) திருமூலட்டானம் - திருமூலத்தானம். சிவபெருமான் சிவலிங்க ரூபமாக இருக்குமிடம். பேரம்பலம் என்பது தேவசபை: தேவர்கள் வந்து பெருமானைத் தரிசித்துப் போற்றுமிடம். பஞ்சாவரணம் - ஐந்து பிரகாரம். நாற்கோபுரம் - நாற்றிசையிலுள்ள நான்கு கோபுரங்கள்; கம்பமண்டபம் - ஆயிரக்கால் மண்டபம். சிவகங்கை யென்னும் திருக்குளத்தீர்த்தம்.

காளமேகப் புலவர் சிவகாமியம்மையைக் கண்டு நிந்தாஸ்துதி யாகக் கீழ்வரும் பாடலைப் பாடியுள்ளார்.

''மாட்டுக்கோன் தங்கை மதுரைவிட்டுத் தில்லைநகர்
ஆட்டுக்கோ னுக்குப்பெண் டாயினாள்—கேட்டிலையோ
குட்டி மறிக்கவொரு கோட்டானையும் பெற்றாள்
கட்டிமணிச் சிற்றிடைச்சி காண்''.

பெண்ணே! நீ இந்தச் செய்கையைக் கேட்கவில்லை போலும். மாடுகளைக் காக்கும் கோபாலனுடைய தங்கையாகிய பார்வதி, தான் பிறந்த ஊராகிய மதுரையை விட்டு வந்து தில்லைப் பதியாகிய சிதம்பரத்தில் நடனமாடுகின்ற நடராசப் பெருமானுக்கு மனைவி யானாள். மேகலை கட்டிய அழகிய சிறிய இடையையுடைய வளாகிய அவள், நாம் தலையிலே குட்டிக் கொண்டு வணங்கும் படியான ஒரு கொம்பையுடைய ஆனைமுகக் கடவுளைப் பெற்றாள். (நிந்தாஸ்துதி - புகழாப் புகழ்ச்சியணி).

தில்லையிலே எழுந்தருளியிருப்பவனும், இளம்பிறையைச் சூடிய வனும், செஞ்சடையினை யுடையவனுமாகிய சிவபெருமான் மன்மதனையும், திரிபுரத்தையும் செந்தழலால் எரிக்க, சிவகாம வல்லியின் துணைகொண்டே செய்தனன். ஆகவே அவனை மட்டும் புகழாமல் சிவகாமி அம்மையையும் புகழ வேண்டும் என்று காள மேகப் புலவர் கூறுகின்றார்.

1. **சிவகாமி அம்மன் அகவல் :**—சுவடி எண் 811-J. சிதிலம். இந்நூல் 294 அடிகளையுடையது. ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. ஆசிரியர் தேவி உபாசகர் என்பதும் அதனால் வாக்கு வன்மை பெற்றவர் என்பதும் தெரிகின்றன. ஆசிரியர் ''மக்கள் குணந்தனை மாதா வன்றி, மிக்கவர் அறிவரோ மேதினி தனிலே'' என்று கூறி, மேலும் தன்னைப்பற்றி, ''புத்தியில்லாதவன் என்றும் போதமில்லாதவன் என்றும், தானமில்லாதவன் என்றும்'' கூறிக் கொள்வது அவருடைய பணிவுத்தன்மையைக் காட்டுகின்றது. அடி 179 ''முத்துடன் காணவொ ருமித்தாறு'' என்று சுவடியில் உள்ளது. எதுகைநோக்கின் ''முற்றுடன்'' என்று இருக்கவேண்டும். மேலும் இறுதிச்சீர் பிழையாகவும் உள்ளது. ''சித்தரந்தாதியில் சித்தம்வைத்தவளே'' (அடி. 139) என்ற அடியினைக்கொண்டு ஆசிரியர் சிந்தரந்தாதி நூலினில் பற்றுடையவர் என்பது அறியலாம்.

2. **சிவகாமி அம்மன் ஊசல் :**—சுவடி எண் 811-J. மிகவும் சிதிலம். இராமபாணப் பூச்சி உண்டதனால் சில இடங்கள் விளங்க வில்லை. உள்ளபடி பதிப்பிக்கப்பட்டுள்ளது. 12வது செய்யுளும் சுவடியில் உள்ளவாறே பதிப்பிக்கப் பட்டுள்ளது.

**3. தில்லைச் சிவகாமி அம்மன் கலிவெண்பா :**—சுவடி எண் 584-J. அ. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குமாரசாமி தேசிகர் அவர்களிடம் இருந்த பிரதியைப்பார்த்து எழுதி வந்த ஒரு கையெழுத்துப் பிரதி உள்ளது. 108 அகவல் கண்ணிகளை யுடையது. ஆசிரியர் இன்னார் என்று தெரியவில்லை. இவர் சைவசித்தாந்த சாத்திரத்தில் மிக்க ஈடுபாடு உடையவர் என்பதை நூலினைப் படிக்கும்போது நன்கு அறியலாம். உபநிடதக் கருத்துக் களையும் ஆசிரியர் கையாண்டுள்ளார். ஆசிரியர் தேவி உபாசகர். 'பஞ்சதசாக்ஷரி' உபதேசம் பெற்றவர் என்பதும் தெரிகிறது.

"பஞ்சப்ரேத - மஞ்சாதிசாயினி" என்ற லலிதாசகஸ்ரநாம அடியின் கருத்தினை ஆசிரியர் மனத்தினுட்கொண்டு "ஓங்கயன் முன் னீரிருவர் உற்றதிறற் பாதமாய்த் தாங்கிய மெய்ப்பீடஞ் சதாசிவமாய்" என்று கூறியுள்ளார்.

மேலும் ஆசிரியர் "வெளியில் விளைந்த வெறும்பாழை" என்ற கந்தரலங்கார அடியினை "வெளியே விளைந்த வெறும்பாழே" என்று கூறிப் போந்துள்ளமையை நோக்க, "கந்தரலங்கார" நூலினில் பற்றுள்ளவர் என்பதும் தெரிகிறது.

**4. சிவகாமியம்மன் பேரில் தோத்திரம் :**—சுவடி எண் 871-C. சிதிலம். இந்நூலின் ஆசிரியர் இன்னார் என்று அறியமுடியவில்லை. 10 செய்யுட்களையுடையது இந்நூல். நூலாசிரியர் சைவசித்தாந்த சாத்திரங்களில் நல்ல தேர்ச்சியுடையவர்.

**5. சிவகாமவல்லி விருத்தம் :**—சுவடி எண் 542. இந்நூல் 13 செய்யுட்களையுடையது. ஆசிரியர் தன்னை ஒன்றும் அறியாத வன் என்று கூறிக்கொள்கிறார். (செய். 2) செய்யுட்களின் நடை செம் பாகமாகவும் உள்ளது. இந்நூலின் ஆசிரியர் அருணாசல முதலியார் என்று தெரிகிறது.

இந்நூல்கள் மேலும் இராமபாணப் பூச்சிகளுக்கு உணவாகுமுன் பதிப்பிக்கவேண்டும் என்று கருதிப் பதிப்பித்து அடியார்களுக்கும் தமிழபிமானிகளுக்கும் நல் விருந்தாக நூல்நிலையம் அளிக்கின்றது.

இந்நூல்கள் அச்சாகும்போது உடனிருந்து ஒப்புநோக்குதல் முதலிய உதவிகளைச் செய்தவர் நூல்நிலையத்தில் பணியாற்றும் திரு. எஸ். சாயிராமன் என்பவர்.

இந்நூல்களைச் சிவகாமி அம்மன் அந்தாதிக்குப் பின் சேர்த்து அச்சிடலாம் என்று நூல்நிலையக் கௌரவப் பாதுகாவலர் திரு. க. சுப்பிரமணிய ஐயரவர்களிடம் கூறியபோது, அவர் அநுமதி அளித்தார். அன்னாருக்கு என் நன்றி.

ஒன்றினுநின் ஞெட்டாமற் றன்னையன்றி
ஓதுவதற் கொன்று மின்றி
நின்றசிவன் காமமுற நீங்காமல்
இடத்தமர்ந்து நேய மாகி
மன்றிலரு ணடம்புரிந்த சிவகாம
சவுந்தரியை வணங்கி வாழ்த்தித்
துன்றுபிறப் பிறப்பென்னுந் துயர்களைந்தின்
பக்கடலுட் டுளைந்து வாழ்வாம்.

(மனோலய விளக்கம் - பாயிரம்)

வித்துவான் சு. பாலசாரநாதன்
ஆராய்ச்சித்துறை
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம்

பெசன்ட் நகர்
8-3-84

# சிவகாமி அம்மன் அகவல்

## காப்பு

நன்றிதரு மெய்ஞ்ஞானம் நற்பவிசு முண்டாகும்
சென்றவிட மெல்லாம் சிறப்பாகும்—என்றும்
அவகா மியமறுக்கும் ஆரணங்காந் தில்லைச்
சிவகாமி யென்றொருகால் செப்பு.

## நூல்

பூவினில் வாழும் பொன்னே மின்னே
மூவர்கள் முதல்வி தேவர்கள் தலைவி
சதுமறை யிறைவி சகலமு முணர்வி
பதும மலரடிவி பரசிவ னிறைவி
மரகத வடிவி வரைதனில் உறைவி
கரதல கமலி கருணையின் நிமலி
பரதல மவுலி பணியணி விமலி
ஹரஹர வசனி யரியொடு துணைவி
அருள்நெறி வினையே அறம்வளர் மனையே
முருகனை யருளி முருகவிழ் குழலி
திரிபுர தகனி தினகர நயனி
கரிமுக னனையே கருதுவ துணையே
தேனே ருசியே சிவமே தவமே
ஊனே உயிரே உருவே அருவே
வானே நிலனே மலர்சேர் மணமே
கானே மயிலே கனிவோர் மனமே
பண்ணே இசையே பகலே இரவே
விண்ணே மணியே மேலோர் முதலே
தண்ணார் சிவனார் தனிநாயகியே
ஒளியே வெளியே உமையே அமையே

தெளிவே குருவின் சிய......ளே
விளைசேர் பயிரே விரைசேர் முளையே
அளியே புனலோ டைந்தா னவளே
காலே யனலே கதிரே மதியே
பாலே யதனுட் பயனு னவளே
முத்தே நிரையே முழுமா மணியே
சித்தே யெவர்க்குந் தெளியா தவளே
சொல்லே பொருளே துரியா தீதத்
தெல்லா வடிவுக் கியல்பா னவளே
நவ்வே மவ்வே நடுவா னவளே
வவ்வே யவ்வே வளர்பெண் ணமுதே
ஒன்ருய் இரண்டாய் ஒருமூன் றெனவே
நின்றே பலவாய் நெடுநின் றவளே
உச்சி விளக்குக் கொளிவெளி தனிலே
அச்ச மறக்கூத் தாடுமணங்கே
சத்தி முத்தி சற்கா ரத்தி
முத்தி பத்தி முற்கா ரத்தி
அறத்தி மறத்தி யறந்தா னத்தி
கறத்தி நிறத்தீக் கைப்பா ணிச்சி
உத்தா ளத்தி உத்தூ ளத்தி
கைத்தா ளத்தி கற்பூ ரத்தி
நித்த விஞேதி நிற்கு மனுதி
சுத்த மிலாதி துக்க மிலாதி
வாலச மெழிலி யங்குச மேனி
சூல கபாலி சூல தடாரி
பூதமொ டாடி பூதமெய்ஞ் ஞானி
நாதவி தாதி நாமமோ தாதி
சீருள திரிபுரம் நீறழ வேசிவன்
மேருவை யொருகை விற்கொண் டவளே
நீயர ணைப்பெற வரனு முணைப்பெற
மாய நிணைந்தே மகிழ்கின் றவளே

உந்தா வானவர் தந்தாய் நயென
வந்தா யெந்தா யாகிய மானே
யோகத் திருவே உண்மைச் சிவனார்
பாகத் துறையும் பரம விளக்கே
கன்னி குமரி …………வ
பின்னி முன்னி பேரின் பத்தி
கலைசேர் வாணி கவுரி கெவுரி
சிலைவா ணுதலி சித்தினி யத்தி
திருவே திருவிற் செயலா னவளே
கருவே கருவிற் கடலா னவளே
காம கலைச்சி காம விதத்தி
காமமொழிச்சி காம விழிச்சி
ஏம விலைச்சி ஏம முலைச்சி
ஏம மொழிச்சி ஏம விழிச்சி
அன்ன நடைச்சி மின்ன லிடைச்சி
கன்னல் மொழிச்சி சொன்ன நிறத்தி
வனச முகத்தி வனச பதத்தி
வனச மொழிச்சி வனச விழிச்சி
முத்திக் கிறைவி முத்தித் தலைவி
முத்தித் துணையே முத்திக் கடலே
ஞான விளக்கே ஞான வசத்தி
ஞான பதத்தி ஞான மொழிச்சி
எண்ணெண் கலையும் இடைபிங் கலையும்
பெண்ணுஞ் சிவமு மாகிய பேறே
நீயா றுள்ளு மாறான துள்ளுங்
கோயில தாகக் குடிகொண் டவளே
நித்தம் நினைப்பவர் குற்ற மறுத்தே
உற்ற பதத்தினில் வைக்கு மணங்கே
புண்ணிய நினைவும் பொருந்திய வன்பரை
எண்ணி யிருநதி பெற்ற வணங்கே
ஈரே ழுலகினை யீன்றவ ளாயினும்

ஆரே யெவர்க்கு மருந்தா முலையே
பொன்னே மணியே புதுமா மலரே
அன்னே அருள்சே ரகிலாண் டவளே
கம்ப னதிக்குட் டம்பரமாடி
தம்ப மெனவே தவமுற் றவளே
ஞாலந் தனில்மிகு நற்கயி லைக்குள்
கோல முறும்பூங் கோதை யணங்கே
சொன்னந் திகழும் சொக்கர்க் கினிதாய்
அன்னம் பகிரங் கயற்கண் ணம்மே
வேருய் முதலாய் வீதி விடங்காய்
ஆரூர் தனில்வாழ் அல்லியங் கோதாய்
ஓங்கா ரத்தி லுற்றிருப் பவளே
ரீங்கா ரத்தி னியல்தெள் ளமுதே
அண்டமு மண்டத் தப்புறந் தனிலும்
உண்டென நின்றே ஒன்ரு னவளே
அரிபர மாதிக ளடியவர் மாதவர்
பரிவொடு ஞானம் படர்கொழு கொம்பே
தேவர் தமக்குந் திகழ் சிவனுக்கும்
மூவர் தமக்கும் முதலா னவளே
தத்துவந் தொண்ணூற் ருருந் தலத்தினில்
மெத்திய வாரு தாரமு மிகவே
மண்டல மூன்றும் வாய்வொரு பத்தும்
அண்டிய நாடி யளவையொரு பத்தும்
முந்திய வுந்தியில் மூலாக் கினியிலும்
அந்த மிலாத அவத்தைகள் பத்தும்
காய மொடுங்கிக் கவலை யொழிந்து
போய தொடுங்கும் புகழுடை மானே
மெய்ஞ்ஞா னத்தை விரும்பு மவர்க்கு
அஞ்ஞா னத்தை யறுக்கு மணங்கே
முக்கோ ணத்தி மூலமந் திரத்தி
அக்கோ டரவம் ஆபர ணத்தி

ஞாலந் தனிலுள நல்லடி யார்தங்
காலன் வினையைக் கடக்கக் கருதி
புண்ணியர் முன்னிற் போய்நிற் பவளே
திண்ணியர் முன்னிற் செல்லா தவளே
தாயொப் பவளே சரணொப் பவர்தம்
மாயப் பிறவியை மாற்று மருந்தே
சொல்லார் நெஞ்சில் தோன்றா தவளே
எளியார் நெஞ்சில் தெளிவா னவளே
தெளியார் நெஞ்சில் தெளியா தவளே
நின்னை நினைப்பவர் தம்மை ரட்சித்தே
அன்னை யெனப்பரி வாகிய மானே
கிளியே யனமே கிளர்கோ கிலமே
வெளியே வெளியில் வீற்றிருப் பவளே
சூடகக் கைச்சி துடியிடை துர்க்கி
பாடகப் பதத்தி பஞ்சாட் சரத்தி
அணுவே யணுவி லண்டமா னவளே
துணிவில்லா ஞானத் துச்சிச் சுடரே
கன்மக் கடற்கரை காணா தவளே
தன்மக் கடற்கரை தான்கண் டவளே
மையுறு குழலி வண்டோ தரிதன்
கையினிற் குருந்தைக் கைக்கொண் டவளே
அவருடன் மூவ ரருந்தமிழ் கேட்டுச்
சிவபத மீய்ந்து சிந்தைகொள் பவளே
மறுவற்ற மதுரையில் வருதிரு விளையாட்
டறுபத்து நாலி லமர்ந்திருப் பவளே
சித்தரந் தாதியில் சித்தம்வைத் தவளே
பத்தர்தம் மீதில் பத்திவைத் தவளே
கர்த்தர் கொடுத்த கருணைத் தவசின்
அர்த்த சரீரம் பெற்ற வணங்கே
சங்கர ருடனே தற்பர வெளிதனில்
அங்கிருந் தேவிளை யாடு மணங்கே
எண்ணே எழுத்தே எல்லா உயிர்க்கும்

கண்ணுற் கிருபைக் கடலா னவளே
விடைதனி லேறிய விமலர்தம் பாகத்
துமையவள் கெங்கா பரமேசு வரியே
மாகத் தமரர் மாபுக லவர்தம்
ஆகத் திருந்தே யாலமுண் டவளே
சங்கரர் மேனி தழும்பது வாகக்
கொங்கையி னாலே குறியிட் டவளே
தாலம் புகழ்வான் தன்னுட னேதிரு
வாலங் காட்டி லாடிய பரையே
எரிவிழி யாலே யெரிபடு மதனுக்
குருவிழி யாக வுயிர்கொடுத் தவளே
ஆழியுந் தோணியு மண்டவண் டங்களும்
ஊழியில் எவர்க்கு மொடுக்கமா னவளே
சரிதையுங் கிரியையும் யோகமும் ஞானமும்
கருதி யிருக்கும் காரிய கர்த்தி
உனைநினை வாக உருப்படு மவர்தம்
நினைவிலும் நினைவாய் நிற்கும் நிமலி
வேறு படுத்தி மெய்பொய் யாக்கி
ஆறுகோ ணத்தி லணுவா னவளே
சத்தமோ டைந்து தானே யாகிப்
புத்தியி லிருந்து பூசைகொள் பவளே
ஊணே உணர்வி னுணர்வா னவளே
காணவொண் ணாதுநின் கழலிணை பரவ
ஆணவ மாயை அறுக்கவல் லவளே
அருவே யுருவாய் ஐந்தக் கரமாய்
குருவா யெனதுட் குடிகொண் டவளே
வண்மைசே ருங்கயி லாயமா நகரில்
உண்மை ஞானந் தவமுரு முனிவோரும்
தேவரஞ் செழுத்தின் சிவமுடை யோரும்
மூவர்முப் பத்து முக்கோ டியரும்

பதஞ்சலி வியாக்கிர பாதமா முனியும்
திதம்பெறு சித்தி ய...யாதரரும்
மற்றுள தேவரு மாமுனி வோரும்
முத்துடன் காணவொ ருமித்தா றா
உம்பர்......ல் ெ...ரை...காணச்
செம் பொன்னுல் வேய்ந்த தில்லையம் பலத்தே
பன்னிரா தித்தர் பந்தம் பிடித்திட
மன்னுதா ராகணம் மதியொளி வீச
அம்பிகை தாள மதிர்ந்தொ லிக்க
கிம்புரு டாதிபர் கீதம் படிக்க
திந்தி திந்திமி தோமென முழங்க
அயன்மால் காணு தடிமுடி யோனும்
நயமாய்த் தாண்டவ மதுநடித் திடவே
சிகமது சுழலத் திசையது சுழல
நகமது சுழல நனைகடல் சுழலக்
கடகரி சுழலக் கரியுரி சுழலப்
படர்சடை சுழலப் பகிரதி சுழலச்
சுருதி முழங்கத் தொனிகள் முழங்க
பருதி முழங்க பவுரி முழங்
கீத முழங்க ெ . . . . வுத முழங்க
வேத முழங்க வேள்வி முழங்க
காள முழங்க கவுத முழங்கத்
தாள முழங்கச் சவுத முழங்க
பலமுனி வோர்கள் பணிந்து ......
நிலைமுய லகனுடல் நெறுநெறு நெறென
அருமறை அயன்மால் ஹரஹர வென்ன
திருவுட னடியவர் சிவசிவ சிவென
தவமிகு மறையவர் தாமவர் சரணென
அவனியி லனைவரு மருள்செய செயென
நன்மை விளங்க ஞானம் விளங்கத்

தன்மம் விளங்கத் ஞானம் விளங்க
ஞானிகள் கண்டிட நான்மறை கண்டிட
வானவர் கண்டிட வள்ளுவர் கண்டிட
ஆனந்த தாண்டவ மாடிய பரனுர்
தேனுந்து பாகம் சிறந்தநா யகியே
தில்லைநா யகியே செய்யநா யகியே
நல்லநா யகியே ஞானநா யகியே
சிற்றம் பலத்துள் சிறந்தநா யகியே
மற்றுஞ் சமைய மகிழ்ந்தநா யகியே
பொன்னம் பலத்துள் போற்றுநா யகியே
அன்னம் பகிர்ந்தே அளிக்கும்நா யகியே
ஈரே ழுலகையு மீன்றருள் தாயே
சீரே புனைசிவ காமசுந் தரியே
சத்தியும் நீயே தர்மமும் நீயே
முத்தியும் நீயே மோக்ஷமும் நீயே
பத்தியும் நீயே பார்வதி நீயே
உத்தமி நீயே உண்மையும் நீயே
அன்னமும் நீயே ஆருயிர் நீயே
சொன்னமு நீயே சொற்பொருள் நீயே
சோதியும் நீயே சுடரொளி நீயே
தாபமு நீயே தாணுவும் நீயே
பூரணி நீயே போதமு நீயே
நாரணி நீயே நாதமு நீயே
அந்தரி நீயே அக்ஷரி நீயே
மந்திரம் நீயே மாயையும் நீயே
இந்திரி நீயே ஈசுவரி நீயே
தந்திரி நீயே சங்கரி நீயே
உமையே அமையே உனதடி தொழுவார்
தமையே ரட்சித் தருள்வது கடனே
நின்னை நினைந்து நின்னை அறிந்து

நின்னை யுணர்ந்து நின்பத மெய்தே
அய்யோ வறிகிலேன் அமையே யுமையே
மெய்யே யென்று விழலுக் கிறைத்தேன்
என்மன மென்குணம் யான்சொல வேணுமோ
நின்மகன் றன்குணம் நீயறி யாயோ

மக்கள் குணந்தனை மாதா வன்றி
மிக்கவ ரறிவரோ மேதினி தனிலே
என்றனைப் பயின்ரு ளீன்றவ ளதிலையான்
புத்தியில் லாதவன் போதமில் லாதவன்
தானமில் லாதவன் தன்மமில் லாதவன்

ஞானமில் லாதவன் நன்மையில் லாதவன்
வாய்மையில் லாதவன் வண்மையில் லாதவன்
திறமுமில் லாதவன் செல்வமில் லாதவன்
உறவுமில் லாதவன் உந்தியில் லாதவன்
கொலைதனக் கஞ்சாக் கொடும்பிணி யாளன்

அலைகடல் போல அலையுங் கருத்தன்
பிறப்பதற் கஞ்சாப் பெரும்பிணி யாளன்
மறப்பதுக் கொன்று மருந்தறி யாதவன்
தவமது முயலத் தானறி யாதவன்
சிவகதை கேளாத் திண்ணிய செவியன்

வந்த வர்க்கீய மனம்பொருந் தாதவன்
சந்தத மேற்கத் தான்சலி யாதவன்
ஆலய மென்று மணுகா வுடலன்
காலனை வெல்லக் கணக்கறி யாதவன்
நின்னடி யார்தம் நிலைமைஎண் ணுதவன்

அன்னமுஞ் சொன்னமு மாசைய ருதவன்
பொற்பத சிவபதம் போற்றறி யாதவன்
நற்பர ஞானமு நண்ணறி யாதவன்
உதராக் கினியி லுழன்றே திரிபவன்
சதுராய்ப் பஞ்சாட் சரமறி யாதவன்

பொய்யும் புளுகும் பொருந்திய குரம்பையன்
மெய்யும் பவுசு மெய்யென் றிருப்பவன்
தீராப் பிறவிச் செயலை யறிந்து
நீராற் குமிழி யெனநினை யாதவன்
தொல்லைச் சிவனார் துலக்க முடித்தருள்
தில்லைச் சிவகா மசவுந் தரியே
அன்ன பிறவிக் கலுத்தே சலித்தேன்
என்னை ரட்சித் திரங்குதல் நினைவாய்
ஆற்கும் புழுவே ஆயினு மின்மினி
யேற்கு மணிவிளக் கென்பது தான்காண்
ஆகா தவர்தமை யாக்குவ துனக்குப்
போகாப் புகழ்காண் புண்ணியக் கடலே
பெற்றவர்க் கல்லது பிள்ளை வருத்தம்
மற்றவர்க் குண்டோ மாநில மீதே
கன்றைத் தாயே காப்பது வேகடன்
அன்றிக் காப்ப தாற்கும் பரங்காண்
பிள்ளை முடங்குரு டூமையே யாகிலும்
தன்னை வளர்த்த தாய்க்குப் பரங்காண்
பிண்டிக் காய மெடுத்தே மிகநான்
உண்டிச் சுமந்த துள்ள மறியும்
வேண்டாங் காணேன் விண்ணப் பங்கேள்
தூண்டா விளக்கே சுடரொளி மணியே
உம்பர்க ளறியா உன்றன் மலர்த்தாள்
நம்பி யிருக்கும் நாயடி யேன்காண்
. . . . . . . . . . சொன்னேன் சொன்னேன்
கவருமல் என்றன் கவலை யொழித்துத்
தீர்த்தென் பிறவி தெளிவுண் டாக்கிக்
காத்தது காத்தாய் கடைபோ கக்கா
கருச்சா ராவகை காத்து ரட்சி

திருச்சிற்றம்பலம்
தேவி சகாயம்

## சிவகாமி அம்மன் ஊசல்

1. புத்திதருஞ் சுழியெழுத்தாம் பொருளாம் நீயே
புரிசடையோன் புத்திரனுய் வந்தாய் நீயே
சத்திகண பதியாக வுலகங் காத்துச்
சண்முகற்குத் திணைப்புனத்திற் சகாயம் நீயே
எத்திசையும் கீர்த்திபெறுந் தில்லை வாழும்
எங்களம்மை சிவகாமி யம்மன் பேரில்
சித்திரமணி யம்பலத் தூசல் பாடச்
செழுத்தகிரி முகக்களிருஞ் செல்வா போற்றி.

2. அருமறைசேர் வேதாவும் தாள மொத்த
ஆயரரி கேசவர்மத் தளமும் கொட்டப்
பரவுபுகழ் தும்புரு நாரதர் கீதம்பாடப்
பவுரிகொள்ளும் பொற்பாத பரம ரீசர்
மருவணிமல் லிகைமுல்லை பாரி சாதம்
வகைமலரா லலங்கார மாலை சூட்டத்
திருவளரு மம்பலத்து ளுன்ன லூசல்
சிவகாம சுந்தரியே ஆடீ ரூசல்.

3. துங்கவயி ரப்பவளக் கால்கள் நாட்டித்
துலங்குவயி டூரியமே கொடுங்கை யாகத்
துங்கமிகு சரப்பளியே கயிற தாகச்
சதுர்வேத நாலுமே தொட்டி லாக
அங்கைகுவித் தரம்பையர்கள் பாடி யாட
அம்பலத்து ளாடுமய்யர் மாலை சூட்டச்
செங்கனகச் சிற்சபையு ளுன்ன லூசல்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

---

பாடல் 2. பவுரி-கூத்துவகையுள் ஒன்று. (கந்தரலங்காரம் 68)

4. பாருலகு தாங்குமணி கயிற தாகப்
பதினாலு லோகமெங்குந் தொட்டி லாக
மேருமலை கயிலைமலை கால்க ளாக
வெங்கதிருஞ் செங்கதிருங் கொடுங்கை யாக
நாரதரும் தும்புருவும் கீதம் பாட
நடராச ரெதிர்நின்று மாலை சூட்டச்
சீருலவு மம்பலத்து ளுன்ன லூசல்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

5. கஞ்சமலர்த் தாளிணைநூ புரங்க ளாடக்
காதிலணி கொந்தளப்பொன் ஞேலை யாட
அஞ்சலணி யெனகரத்தில் கடக மாட
அளிவளைக்கை வந்திதோள் வளைக ளாட
விஞ்சையனுன் னிமையூடு தாவடங்க ளாட
மேகலைமே லாபரண மிகவு மாடச்
செஞ்சடையும் பிறைமுடியும் ஆட வாடச்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

6. மகம்பெறுவா னவர்கள் பூமாலை தூவ
மலர்மாது ஆபரண வகைகள் சாற்ற
மிகும்பணிசேர் இரவியிந்து விளக்காய் நிற்ப
விண்ணவர்கோ(ன்) மான்மின்ஞர் கவரி வீச
உகம்புகழு முனிவர்களு முருகிப் போற்ற
ஓங்குபுகழ் மார்கழிநீ ரூசல் மாலை
திகம்பரசிற் சபைநாதர் மாலை சூட்டச்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

7. கும்பமுனி செந்தமிழால் பிரபந்தம் பாடக்
கொண்டல்வண்ணன் வேதாவும் வேதம் பாடத்
தும்புரரும் நாரதரும் கீதம் பாடத்
துலங்குசைவ சிகாமுனிமுத் தமிழும் பாட
இன்பமுடன் இந்திராணி கவரி வீச
இறைவர்சிற் சபைநாதர் மாலை சூட்டச்
செம்பொனெனு மம்பலத்து ளுன்ன லூசல்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

8. அட்டதிக்குப் பாலகரும் வேதாவு மாலு
அந்தணர்மூ வாயிரவர் அன்பு ளோரும்
இட்டமுடன் பதஞ்சலியும் வியாக்கிர
மாமுனியும்
இரணியவன்ம சக்கரவர்த்தி யிமையோர்
தாமும்
மட்டுலவு பங்கயன்மா லவர்வாழ் மூதூர்
வாணியுட னிந்திராணி மாது ஞான
சிட்டர்களுந் தொழுஞ்சபை யுளு ன்ன லூசல்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

9. அறந்தழைக்குங் கச்சியில்வாழ் கம்ப நாதர்
அய்யர்திரு மேனியெல்லாந் தழும்ப தாக
..............................................................
..............................................................
மறந்திருக்கொ ணுக்கயிலை ஞானப் பூவாய்ப்
பேசரிய அருணைஉண்ணு முலையு மாகிச்
சிறந்திருக்கும் அம்பலத்து ளுன்ன லூசல்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

10. பூமலரோன் மாயோனுந் தேடு நாதர்
புலிமுனியும் பதஞ்சலியும் போற்றும் பாதர்
காமனைநீ றெழவெரித்த நெற்றிக் கண்ணர்
கனகசபை தனிலாடுங் கார ணீகர்
வாமமதி லிருந்து ஆனந்தக் கூத்தில்
மந்திரத்தின் சுடர்விளக்காய் மணியாய் நிற்பத்
தேமொழியே சிற்சபையு ளுன்ன லூசல்
சிவகாம சுந்தரி ஆடீ ரூசல்.

11. செயமங் களம்நித் தியசுப மங்களம்

மங்களம் கனகசபை வாசநட ராசர்க்கும்
மங்களம் புகழ்தில்லை வன நாதர்க்கும்
(செயமங்களம்)

மங்களம் சிவகாம வல்லிமண வாளருக்கும்
மங்களம் அம்பலவா ணமகதேவர்க்கும்
(செயமங்களம்)

செனன சாகர ந்தீர்க் கும்சிவகெங்கை நா தருக்கும்
சனக சனந்தனர்க்கு மறைசாற் றினவர்க்கும்
(செயமங்களம்)

அனகமுனை யிளமதிப கீரதிதீ நிலாவு சடை
யுகை கயிலாய மலையமர்ந்தவர்க்கும்
(செயமங்களம்).

12. மூதண்ட முழுதும் முன்னளித்து விளையாடி
வேதண்ட கோதண்ட விரிதலை களைமுன்
..............ங்......கனல்வித்தநகை யமலை
மாதண்ட மறையவரும்.............................
புண்டரிக மலரயனும் கொண்டல் வண்ணனும்
அண்டர்களும் கண்டுதொழ ஒண்டொடி
யினுடன்
வாதுகொண்டு நடனமிடு நீலகண்டர் தமக்குச்
செயமங்களம் நித்திய சுபமங்களம்.

திருச்சிற்றம்பலம்

## தில்லைச் சிவகாமி அம்மன்

### கலிவெண்பா

சீருலவுந் தில்லைச் சிவகாம சுந்தரிதன்
பேர்கலிவெண் பாவகவற் பேசுதற்கு—ஆர்கலிசூழ்
பொற்பொதுவி ஞடும் புனிதபர னீன்றவருட்
கற்பகநற் குஞ்சரமே காப்பு.

### நூல்

1. சீர்புனையும் செம்பதுமத் தேவுஞ் செழுந்துளபத்
தார்புனையும் செங்கைத் தனுமாலும் – ஏர்புனைந்த

. துங்கச் சிலைமதனைத் தூளி படச்சினத்த
கங்கைச் சடைமவுலிக் கண்ணுதலும்–பொங்குதிறல்

3. இந்திரரும் வானத் திமையோர் இருடிகளும்
சந்திரரும் சூரியருந் தானவரும் - முந்தியிரு

4. செங்கை குவித்துச் செயசெயவென் றுதரிக்கும்
பங்கயப்பொற் றளின் பணுசயனி - தங்குபுகழ்

5. ஈசான சத்தி யியமாங்கு தற்புருடி
தேசார கோர திரியம்பகி - பேசரிய

6. வாமி கருணி மகிழ்சத்தி யோசாதி
தாமமலர்க் கொன்றைச் சடாமகுடி – நாமமிகு

---

1. செம்பதுமத்தேவு - பிரமன். பிரமன் செந்தாமரையில் வீற்றிருப்பதாகவும், வெண்டாமரையில் வீற்றிருப்பதாகவும் கூறுவர். (தக்கயாகப்பரணி. 282, 698.)

4. பணுசயனி - பாம்பைப் படுக்கையாகவுடையவள்.
''வெங்கட் பணிஅணை மேல்துயில் கூரும் விழுப்பொருளே''

(அபிராமி அந்தாதி. 35.) ஆதிசேஷன் மேல் பள்ளி கொண்டிருப்பவர் திருமால். அம்பிகையே திருமாலாக இருந்து உலகைக் காக்கின்ருள். ''கோவிந்த ரூபிணீ'' (லலிதா ஸஹஸ்ர நாமம்; 63.) அம்பிகையின் உருவங்களில் ஆண் உருவமாக உள்ளது திருமால் வடிவம். நாராயணனுக்கும் தேவிக்கும் பேதம் இல்லை. அபேத சம்பந்தத்தால் பணுசயனி என்ருர்.

7. சுத்த முடன்சுத்தா சுத்தம சுத்தமெனும்
இத்தகைமை யெண்மூன்றே டேழைந்தாய் -
வைத்ததொகை

8. ஆறு றறுபதுட னுறு றவையாகி
வேறுகி நின்ற விமலியே - மாருத

9. கன்மமொரு மூன்றும் கடிய மலமைந்தும்
வன்மமிகும் இரண்டு வல்வினையு - மென்மருவும்

10. பாவனையா மாவினையும் பவ்வச் சுழியுதவு
மூவகையா மேடணையு முக்குணமும் - மேவரிய

11. கோபமுடன் காமக் குரோதமத மார்ச்சரிய
லோபமிகு மோக முயரிடும்பை - ஏவமுறு

12. யானெனவீ ருங்காரம் எல்லா மறுத்தருளி
யானசுகா தீத மருளுவாய் - ஊனுதவும்

13. கேடான தத்துவம்போய்க் கேவலம்போய்த்
தானகன்றும்
வீடாய் மருளு மிகக்கழன்று - நீடுமறை

14. தன்பயனு நீக்கித் தனிப்பரம சாக்கிரமாம்
இன்ப வதீதத் தெழுஞ்சுடரே - துன்பமற

---

7. **சுத்தாசுத்தம்** - காலதத்துவம், நியதிதத்துவம் கலாதத்துவம், வித்தியா தத்துவம், அராக தத்துவம், புருடதத்துவம், மூலப்பகுதி என்ற ஏழு பிரிவினதாய்ச் சுத்தமும் அசுத்தமும் கலந்த தத்துவ பேதம்.

9. கன்மம் மூன்று - சஞ்சிதம், பிராரப்தம், ஆகாமியம். மலப் ஐந்து :- ஆணவம், மாயை, கன்மம், மாயேயம், திரோதாயி.
இரண்டு வல்வினை - நல்வினை, தீவினை
அறம் பாவம் - நல்வினை, தீவினை. (திருவாசகம். சிவபுராணம் 51-52.)

10. மூவகையாம் ஏடணை - புத்திர ஏஷணை, வித்த ஏஷணை, லோக ஏஷணை. புத்திர ஏஷணை - கலியாணம் செய்து கொண்டு மக்களைப் பெறுகிற விருப்பம்; வித்த ஏஷணை - பணம் சம்பாதிக்க வேண்டுமென்கிற விருப்பம்; லோக ஏஷணை-கர்மாவினுல் சுவர்க்காதி லோகங்களை அடைய வேண்டும் என்ற விருப்பம். (பிரகதாரண்யக உபநிஷத். அத்தியாயம் 3. பிராம்மணம் 5.) ஏஷணை - விருப்பம்.
முக்குணம் - சத்துவம், ராசதம், தாமசம்.

11. ஏவம் - குற்றம்.

12. சுகாதீதம் - மோட்சம்.

15. ஓது மதீதத்தே யொன்றாய் இரண்டாகி
மோதும் சுழுத்திதனின் மூன்றாகி - நீதிக்

16. கனவி னிலையைந்தாய்க் காட்சிதரும் இன்ப
நனவுதனில் ஏழைந்தாய் நண்ணி - நினைவுறுங்கால்

17. பூதத்தில் ஒன்றும் பொறிசேர் அவையிலொன்று
மீதத் துடற்கூற்றில் ஈரிரண்டும் - தீதறவே

18. ஏற்ற கலாதிவகை ஏழுங் குடிலைவரும்
சாற்றும் அறிகருவி தாணைந்தும் - ஊற்றமுறக்

19. கூடி ஒருபுலனிற் கூர்ந்து வரும்பயனை
நாடும் உயிர்க்குயிராம் நற்றுணையே - தேடரிய

20. வட்டத்தில் ஒன்றாகி வன்கால் இரண்டாகி
ஒட்டும் எரியில் ஒருமூன்றாய்க் - கிட்டும்

21. புனலிடையில் நான்காய்ப் புவியதனில் ஐந்தாம்
எனமருவி நிற்கும் இறைவி - வினவரிய

22. ஆறெட்டும் பெற்ற அடைவோர்க் கதுவதுவாய்
வேறட்டாய் நின்றருளும் மெல்லியளே - சேறிட்ட

23. செப்பரிய மூலம் திருந்துசுவா திட்டானம்
ஒப்பில்மணி பூரகமாம் ஓங்கொளிசேர் - தப்பரிய

---

19-21. வட்டம் - ஆகாயம், ஒன்று-ஓசை. வன்கால் - காற்று. இரண்டு - ஓசை, ஊறு. எரி - தீ. மூன்று - ஓசை, ஊறு, ஒளி. புனல் - நீர். நான்கு - ஓசை, ஊறு, ஒளி, சுவை. புவி - பூமி. ஐந்து : ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் "பாரிடை ஐந்தாய்...... ..............................வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி." திருவாசகம் - போற்றித் திருவகவல். அடி. 137-141.

23. மூலாதாரம்: குய்யத்துக்கும் குதத்துக்கும் மத்தியில் நான்கிதழ்த் தாமரை போலுள்ள சக்கரம். சுவாதிட்டானம் - ஆறு ஆதாரங்களுள் மூலாதாரத்திற்கும் நாபிக்கும் இடையே ஆறிதழ்த் தாமரை வடிவாயுள்ள தானம். மணிபூரகம் - நாபிக்கு அருகில் ஸுஷும்நாகண்டத்தில் உள்ள சக்கரம் பத்துத் தளமுள்ள தாமரை வடிவில் உள்ளது.

அநாகதம்: இதய ஸ்தானத்தில் பன்னிரண்டு இதழ்த் தாமரை வடிவுள்ளது. விசுத்தி - அடிநாவின் தானத்தில் பதினாறு இதழ்த்தாமரை வடிவினது. பிரமரந்திரம் - உச்சித்துவாரம்.

24. வீசும் அநாகதமாய் வீறுர் விசுத்தியதாய்
ஆசிலொளி சேர்பிர மரந்திரமாய்ப் - பேசுதொகை

25. ஓரா யிரமாகி யொன்றிரண்டாய் ஈரெட்டாய்
ஈராறு டீரைந் திருமூன்ருய்ச் - சீர்நாலாய்

26. வெண்மையுடன் பொன்சிவப்பு மேவும் படிகநிறம்
தண்மை தருங்குருந்து தண்புகையாய் - வண்மைத்

27. திரள்பளிங்கு பொன்னிறமாய்ச் செய்ய பதுமத்
திருளறநின் ருேங்குபர மேட்டி—தெருளுஞ்

28. சதுமுகவன் மாயனெழிற் சங்கரனே டீசன்
அதீதஞ் சதாசிவ மாமம்மே—விதியடைவே

29. நாமகளாய்ப் பூமகளாய் நண்ணு முமையவளாம்
வாம கவுரி மனேன்மணியே—தாமடைவே

30. ஐந்தொழிலு மாகி அநேக விதமாகிப்
பந்தமற நிற்கும் பதுமினியே—அந்தமுற

31. ஓங்கயன்முன் னீரிருவர் உற்றதிறற் பாதமாய்த்
தாங்கிய மெய்ப்பீடஞ் சதாசிவமாய்-ஆங்கதன்மேல்

32. புண்டரிக வாதனமாய்ப் பொற்புறவே வீற்றிருக்கும்
அண்டர் அணுகா அமுதமே—திண்டிறல்சேர்

---

30. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

31. பிரமன், விஷ்ணு, ருத்திரன், ஈசுவரன் என்ற நால்வர் தத்தம் தொழிலை விட்டுத் தன் தனித்தன்மையையும் இழந்து, தேவியிடம் ஒடுங்கியவர்களாகத் தேவி வீற்றிருக்கும் உயர் ஆசனத்தின் கால்களாக இருக்கின்றனர். சதாசிவனும் மஞ்சத்தின் விரிப்புப் பலகையாக இருக்கிருர். இவர்களை ஆசனமாகக் கொண்டு ஒய்யாரமாகச் சாய்ந்து கொண்டிருக்கிருள்.

33. ஈராறு டீரெட் டிருநான்கு நாற்கலையும்
ஆராயும் பெண்ணு ணலியாகிப்—பேராத

34. வேதனுடன் ஐவகையும் விந்துவுட னுதமும்போய்
ஆதிபர நாதாந்த முங்கடந்து—மீதமரு

35. விஞ்சதுர வங்குலியாய் வீறும் வியாபினியா
யுஞ்சமனை வியோம ரூபிணியாய்க்—கொஞ்ச

36. அனந்தை அநாதை அனுசிருதை யாகி
இனஞ்சேர் வடிவம் இருநான்கில்—சினஞ்சேர்

37. எறிசூல மாதவன்செய் வட்டமிரு நான்கில்
பொறிசேர் தனிவட்டம் போக்கிக்—குறையா

38. வருசுழி சக்கரம்பொன் மன்னும் வெளியுள்ளே
பிரியா துகந்துறையும் பெண்ணே—பரிவான

39. உன்னரிய நாற்சதுரத் தோங்கார ஹ்ரீங்காரம்
தன்னிரண்டு மூலை தனிற்றேன்றிப் – பின்னி

40. நடுவுதண்டைச் சுற்றியே நாலிரண்டா தாரம்
புருவமத்தி யத்தைஅண்டிப் போந்து - மடையா

41. மடைபோ லிருந்தூடே மாறுமல் ஊதும்
இடைபிங் கலையா யிருப்பாய் – அடைவுடனே

---

33. முப்பத்தாறு தத்துவங்கள் : அவையாவன. ஆன்ம தத்துவம்-24; வித்தியா தத்துவம் 7; சுத்த தத்துவம் 5.

34. நாதம் - ஓங்காரம் முதலியவற்றில் முடிவில் 'ம்' ஒலி நீட்சியாக - கார்வை ஒலியாக ஒலிக்கும் நாத ஒலி. அநாகதஸ்தானமான இதயத்தில் மோதாமல் ஏற்படும் ஒலி அநாகதம் எனும் நாதம். யோகிகளால் உணரக்கூடிய ஒலி வடிவம். அந்த நாதத்தால் உணரப்படும் ஆனந்த வடிவில் உள்ளவள் தேவி.

35. வியாபினி:- சத்தி கலையின் வியாபகத்துக்கு மேல் நான்கு அங்குல அளவு வியாபினி கலையின் வியாபகம்.

சமனை:- வியாபினி கலையின் வியாபகத்துக்கு மேல் மூன்று அங்குல அளவு சமனை கலையின் வியாபகம்.

வியாபினி கலையின் வியாபகத்துக்கு மேல் ஓர் அங்குல அளவு உன்மனை கலையின் வியாபகம். 'வியோம ரூபிணி, அனந்தை, அனுதை அனுசிருதை' இவை சத்திக்கும் வியாபினிக்கும் இடைப்பட்ட நான்கு அங்குலத்திலே ஒவ்வோர் அங்குல அளவில் அடங்கி நிற்கும் என்று 'பிராசாத அகவல்' கூறுகின்றது.

41. இடை - இடைகலை, இடது நாசியால் விடும் சுவாசம். பிங்கலை - வலது நாசியால் விடும் சுவாசம். அபானத்துக்கும் இலிங்கத்துக்கும் நடுவே உள்ள முக்கோணம். அசபையு மிலிங்கத் துடங்கி உந்திக்குக் கீழ் ஓங்காரமும், ரீங்காரமும் முக்கோணத்தைச் சூழ்ந்து சொரிதழல் பிரகாசமாயிருக்கும்.

42. நாடவரி தாகி நடுவாகும் வச்சிரமாய்த்
தேடுஞ் சுழினையதாய்ச் சித்திரமாய் - வாடாமல்

43. ஒன்றுக்குள் ஒன்ருய் உரைசேருங் கோணத்தே
சென்ருேர் தலைசெருகித் தீதறவங் – கொன்றின்

44. ஒரு வேய்போ லோங்கி ஒளிரும் சுழினை
மருவு துளைவழியே மன்னிப் - புரையறவே

45. யாறுதட்டு மூடுருவி யப்பால் வெளியதனுள்
ஆடும் தனிமன்றுள் ஆரணங்கே - நீடு

46. மசைவை யெழுமூன் றறுநா றுருவம்
விசையையுறு மங்கிச மேன்மேவி - யிசையுறுங்கால்

47. ஏழு நிலத்தடைவே ஈந்ததுகை யுங்கரிக்கும்
தாழுமறு நூருகுந் தாமரைமேல் - வாழும்

48. அயன்முதன் மூவோர்க்கு மூவா ருயிரமா
மயேசர் சதாசிவற்கு மன்ப - நயமுறுங்கால்

49. மூவா யிரமாகி முந்தும்வெளி யாய்நின்ற
தாவாத இன்பத் தனிச்சுடரே – ஓவாத

50. மாய னயனுகி மதியிரவி தானுகி
யேயவதற் கேது விராகுவாய் - நேயமிகும்

51. பெண்ணுடனு ணுகிப் பிறங்குமனக் கல்லாகி
எண்ணும் வினைக ளிரண்டாகி - நண்ணும்

52. இடைபிங் கலைகள் இரண்டதனைப் பாங்கே
விடாமல் இறுக்கி விழுங்கிக் - கெடாததோர்

53. எட்டெழுத்துக் கப்புறமாம் ஏகாட் சரத்துடனே
முட்டியசெம் பொற்றூண் முனையாகிக் - கட்டரிய

54. சோராச் சுழினைத் துளைபுக்கி யேயவத்தை
சாராத ஞானத் தழல்சார்ந்து - நேராக

55. ஆறு நிலையு மறிந்தே யதீதமுறும்
தேறு துவந்தந் திகட்டியே - பேறுடைய

---

42. சுழினை - சுழுமுனை என்னும் நாடி.

43. பாட பேதம்:- ஒரு பொருள் போ.

53. பா. ம். கிட்டரிய.

56. போதமுறும் சிற்றறிவைப் போக்கிப் புகலரிய
மீதானச் சுத்தவெளி புகுந்து - வாதை

57. இரவும் பகலும் எனதும் தனதும்
வரவும் செலவும் மறுத்துப் - புரியும்

58. நினைப்பறவே நின்றுணரு நேசத்தோர் சித்தந்
தனைப்பிரிந்து நீங்காச் சமத்தி - தொனித்த

59. யகார முடியாயவ் வெழின்முகமே வவ்வாய்
சிகாரமிரு தோளாய்ச் சிறந்த - மகாரம்

60. பொருந்தும் வயிருய்நற் பொன்னி னடியே
திருந்து நகாரமதாய்ச் சேர்ந்தும் - வருந்தாத்

61. துடிசிகரம் வீசுகரந் தோற்றிய வாயவ்வே
படியலமைப் பாயாய்ப் பணித்து - முடிவிலுறும்

62. நவ்வே யெரியாக நங்கொடிய மூலமலம்
மவ்வே முயலகனுய் வைத்தருளிச் - செவ்விதரு

63. மோங்காரம் வாசியா யுற்ற சுடரெழுத்தாய்
நீங்காப் புவிநடுவே நேசமுடன் - பாங்குறவே

64. மான்மருவுஞ் செம்பொன் மணிமன்றுள் தங்கிடமாய்க்
கால்மாறி யாடுங் கருணையே - மேன்மாறு

65. மோசைமிகு நாமா யொழித்தருளி யவ்வதனை
வாசியிடை வைக்கு மலர்க்குழலே - நேசமிகு

66. மூனே யுயிரே யுயிர்க்குயிரே யுற்றுணரில்
நானேநீ யாகிநின்ற நாயகமே - தானும்

---

59-61. ''ஆடும் படிகேள் நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியி லே''ந''கரம் – கூடும்
''ம''கரம் உதரம் வளர்தோள் ''சி''கரம்
பகருமுகம் ''வா'' முடி''ய''ப், பார்''.
உண்மை விளக்கம்

''நகரமிரு பாத மாகி மகரவயி ருகி மார்பு
நடுசிகர மாகி வாய்வ கரமாகி
நதிமுடிய சார மாகி உதயுதிரு மேனி யாகி
நவசிவய மாமை யாகி'' (என்கிறது திருப்புகழ்)

பரமேசுவரனுக்கும் அம்பிகைக்கும் உள்ள அபேத சம்பந்தத்தை விளக்கிக் காட்டுகின்ருர்.

67. வெளியே விளைந்த வெறும்பாழே மாறு
வொளியே யொளிக்குள் ஒளியே - யளிசிறந்த
68. வெண்ணஞ்சு முக்கோணத் தேகாட் சரரூபி
பண்ணஞ்சு மின்பப் பனிமொழியே-தண்ணளிசேர்
69. அன்னே பராபரையே யையிற் பகவதியே
மின்னே சுமங்கலியே வித்தகியே - கன்னி
70. திசைபரவு மோகினி சித்தசங் காரி
பசுநா பரனில்லாப் பாழி - குசைநெகிழா
71. நாரணி வாணி நவகோணி ரீங்காரி
வாரணி சத்தி மனோலயி - காரணி
72. உல்லாச ரூபி உமாதேவி கங்காளி
மல்லார் புயவீர மாகாளி - சொல்லரிய

---

68. ஏகாட்சரரூபி :- ஏகம் - ஒப்பற்ற ஒன்று. அட்சரம் - நாச மில்லாதது. இது பரமேசுவரனுக்கு உபாதியாயுள்ளதும், கூடஸ்த பதத்திற்கு வாச்சியமானதுமான மாயை, இது ஆத்ம ஞானத்தினால் முக்தி ஏற்படும் வரையில் நாசம் அடையாது. இந்த மாயையில் பிரதிபிம்பித்து ஸர்வக்ஞத்வம் முதலிய குணங்களோடு கூடியவள் பரதேவதை; அல்லது ஏகாக்ஷரம் - பிரணவம். இதன் வாசியம் அபரப்ரஹ்மம், லக்ஷ்யம் பரப்ரஹ்மம் ; இத்தகைய பிரணவஸ்வரூப மாய் விளங்குபவள் தேவி.

ஏகனையும், நாசமின்றியவனையும் விளங்கும் பரமேசுவரனைப் பாதி சரீரமாகவுடையவள், பரதேவதை ; அல்லது ஏகாக்ஷரம் - மாயா பீஜமாகும் ஹ்ரீங்காரம்; இந்த ஹ்ரீங்கார உபாசனைக்கு உபாஸ்ய மாய் விளங்குபவள் தேவி ;

"ஸச்சிந்மய: சிவ: ஸாக்ஷாத் தத்ஸ்தான நந்தமயி சிவா" என்றும் ஸ்த்ரீரூபாம் சிந்தயேத்தேவீம் பும்ரூபாம் அத ஈசுவரீம், அதவா நிஷ்கலம் த்யாரூயத் சத்சிதாநந்த: விக்ரஹாம் "என்றும்" த்வம் ஸ்த்ரீ த்வம் புமான் என்றும் ச்ருதி, ஸ்மிருதிகளில் கூறப் பட்டுள்ளபடி தேவியானவள் உபாதிபேதத்தினால் சிவனென்றும், சிவையென்றும், சிவமென்றும் ஆண்பால் முதலிய லிங்க பேதத்தை யடைகின்றாள். ப்ரஹ்மாபின்ன சித்சக்தியை ஆண்பாலாகவும், பெண்பாலாகவும், நம்புஸகலிங்கமாகவும் கூறும் ச்ருதி வாக்கியங்கள் பல உண்டு. ஆதலின் அவன், அவள், அது என்பவற்றிற்கும் பேதம் இல்லை. இங்ஙனமே தத் - த்வம் என்பவற்றிற்கும் பேதம் இல்லை. இந்த அபேதந் தான் தத்த்வம் பதங்களின் லக்ஷ்யார்த்தம் ஆகும்" என்று லலிதா த்ரிசதி ஸ்தோத்திரம்" என்ற நூலிலுள்ள "ஏகாக்ஷரி" என்ற பதத்திற்கு ஸ்ரீ வித்யா உபாஸகர் ந. சுப்பிரமணிய ஐயர் அவர்கள் உரை கண்டுள்ளார்.

73. நீலி புராதனி நின்மலி மாமோடி
மூலாதா ரீபிரம மூதண்டி - வாலாயி

74. உக்கிரம சத்தி யொளிசேர் திருமுகத்தி
சக்கிரா யுதத்தி சதானந்தி - கைக்கரியின்

75. தோலி பயாசடில சூலி யசுரர்குல
காலி பிரளையமாங் காலத்தி - சீலி

76. சமர வயிரவி சட்சமைய தல்லி
குமரிகர பாசாங்கு சத்தி - அமலி

77. வராகி திரிநேத்திரி வாழிந் திராணி
அராகர கங்கண வானந்தி - பரானந்தர்

78. தேவிநிரு வாணி சித்தாந்தி திரிபுரவெங்
கோபிசெம் பொன்னுரும் கோதண்டி - தாவில்

79. உருவமொரு நான்கா யுருவருவ மொன்ருய்
அருவமொரு நான்காகு மம்மே-இருவினைநேர்

80. ஒத்தங் குணரும் உடலுயிரும் அன்பாகி
எத்தும் பலியிரக்க வேண்டியிடு மத்த

81. கபாலி திரிசூலி கங்காளி மாயி
மகாரி சிவலோக வல்லி-குகரரி

82. காக்கும் இடைபிங் கலையிடமாய் மேவியிரு
மூக்கிலுற வாழ்கின்ற மொய்குழலே - நாக்கமலத்

83. தேனே யமுதின் றெளிவே யொளிசிறந்த
மானே மணியே மரகதமே - யானதிறல்

84. நச்சார் விழிச்சி நளின மதிவதனி
கச்சாருங் கும்பக் கனதனத்தி - நச்சி

85. இருவ ரடிமகுட மெய்தர் திறைஞ்சி
இருவ ரடிபரவி யேத்தப் - பொர்ருவிலர்ச்

86. செம்பொர்ன் மதில்புடைசூழ் சிற்றம்பல மன்றுள்
உம்பர்தொழ நின்ருடு முன்மணியே - தம்பமென

---

74. கைக்கரி - யானை.
86. உம்பர் - தேவர், தம்பம் - ஸ்தம்பம் வடசொல்

87. மாலுஞ் சதுமுகனும் வானவரு மாமறைகள்
நாலுந் தொழுது நயந்திறைஞ்சச் - சோலைசெறி

88. தில்லைநகர் வாழுஞ் சிவகாமித் தாயேமுன்
தொல்லை மறைமுடிவிற் சோதியே - நல்ல

89. அளிபரவுங் காரளகத் தாயிழையே பச்சைக்
கிளிமொழியே யென்றுயரங் கேளாய்-விளிவின்றி

90. ஏன்ற வினையால் இருநிலத்தில் வந்தீண்டி
ஆன்ற கொலைகளவுக் களாகி - யூன்றியவெங்

91. காமா விகாரக் கவலைக்கடற் சுழிப்பட்
டேமாந் தயலா ரிருநிதிக்கு - மாமாயக்

92. குத்திரமும் பொய்யுங் குடிகொண்டி யாவர்க்கு
மத்திறமே மெய்யென் றருளகற்றிச்-சத்தாங்

93. குரவ னடிபிழைத்துங் குற்றம் புகன்றும்
பரவுதவ வேடம் பழித்தும் - விரவுநெறி

94. மெய்வேடத் தார்போல மேதினியி லூண்
பொருட்டாற்
பொய்வேடங் கொண்டு பொழுதகற்றி-வெய்யவினை

95. சிந்தைதனில் ஒன்றுன்னச் செப்புவதங் கொன்றாகி
உந்தும் பொறிவழியே யுற்றழந்தி - நிந்தையுற

96. எத்தனைபேர்க் கன்னையுமா யெத்தனைபேர்க்
கையனுமாய்
எத்தனைபேர்க் கேற்ற எழின்மகவாய்க்-குத்திரஞ்சேர்

97. பூட்டையினீர் போலப் பொருந்து மிருபிறவிக்
கூட்டைச் சுமந்து குலைகுலைந்து - வட்டமுற

98. நல்வினையே யின்றி யறுநரகுக் காளாகி
வல்வினையேன் செய்தபிழை மட்டில்லை -
சொல்லுங்கால்

99. ஆழி மணலுக் களவுண் டருந்துயர்சேர்
ஏழையேன் செய்தபிழைக் கெண்ணில்லை-தாழாமல்

---

87. மால் - திருமால். 89. என்றுயரம் - என் துயரம்.
92. குத்திரம் – வஞ்சனை.

100. என்னெறியே பற்றிடினு மென்னவையே
செய்திடினும்
அன்னவையே யுன்ற னருளன்றோ—புன்னெறிசேர்

101. நாயேன் சிறிதுபிழை நாடா தவைபொறுக்கத்
தாயே பரமுனக்குத் தஞ்சமே - வேயீன்ற

102. முத்தே சமய முதலே யுணர்வரிய
சத்தே அசத்தே சதசத்தே - சுத்த

103. அருளே சுகமிருக்கு மாலயமே யின்பப்
பொருளே மரகதமே பொன்னே - தெருளுறுமென்

104. வாக்குமனக் காயத் தால்வந்த வினையகற்றித்
தாக்குமல மோரைந்துந் தானகற்றி - நோக்கும்

105. பிறப்பேழென் றோதும் பெருந்துயரம் நீக்கி
மறப்பரு மூவேடணையு மாற்றிச் - சிறப்பமருஞ்

106. சொல்லிறந்து சும்மா விருக்குஞ் சுகவெளியா
மில்லிறந்து புக்கங் கிடரகற்றி - மெல்லவே

107. நானன்றி நீயன்றி நாடும் பொருள்வேறு
தானன்றி நீங்காத் தமோமயமே - யேனவினைப்

108. பந்த மறுக்கும் பரமசுகா தீதமே
தந்தருணின் றருளே சரண்.

---

101. வேய் - மூங்கில்.

டாக்டர் ஐயரவர்கள் இந்நூல் கச்சிக் காலாண்டார் தெரு குமாரசாமி தேசிகர் வீட்டுப் பிரதியைப் பார்த்து எழுதியது (17-10-1927) என்று குறிப்பிட்டுள்ளார்.

## சிவகாமியம்மன் பேரில் தோத்திரம்

1. ஒருமுதலே கருமத்தாற் பலவாகிப்
பெயருநிறீஇ யுபைய மாகி
அருவுருவாய்க் குணங்களா யையைஞ்சி
னப்புறமா யசல மாகிக்
கருதருசிற் ககனத்துக் கடவுளிடத்
தமர்ந்தெமையாள் கருணை யாலே
திருமகளுந் தொழநின்ற சிவகாம
சவுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம்.

2. ஐந்துதொழிற் கொருவித்தா யனைத்தினையும்
படைத்துயிர்கட் கன்னை யாகிப்
பந்தமுறு காரணத்தி லொடுக்கியுநால்
வகைமாயைப் பணிந டாத்திச்
சந்ததமும் பேரருளாற் றவமாக்கித்
தனிமுத்தி சாரச் செய்து
சிந்தையினிற் பிரியாத சிவகாம
சவுந்தரியைச் சிந்தை செய்வாம்.

---

1. ஐயைஞ்சின்-இருபத்து ஐந்து தத்துவங்கள். சிற்ககனத்துக் கடவுள்-சிவபெருமான். இடத்தமர்ந்து-இடது பாகத்தில் வீற்றிருந்து.

2. ஐந்து தொழிற்கும் ஒரு வித்தாய்-படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்து தொழிற்கும் மூல காரணமாக இருக்கின்றவள்.

௩. குறியின்றி யருட்குறியாய்க் குணமின்றிச்
சிற்குணமாய்க் குறைவின் ருகி
நிறைகின்ற நித்தியமாய் நின்மலமாய்க்
கணமேனு நினைவார்க் கன்பாய்
அறிகின்ற வுத்தமருக் கருட்பதந்தந்
தெப்பதமு மருமை யின்றிச்
சிறிதென்று நினையவருள் சிவகாமி
சவுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம்.

4. போக்குவர வுருவின்றிப் பூரணமாய்
வானம்போற் புந்தி செய்து
வாக்குமன மிறந்துளக்கண் விழித்திருவர்
பெறுங்கதியிவ் வன்கண் ணுலே
நோக்கிடுமுன் றரும்பொதுவிற் றிருநடஞ்செய்
கருணையரு ளேக்குஞ் சேரத்
தேக்கிமகிழ் சிறந்தெமையாள் சிவகாம
சவுந்தரியைச் சிந்தை செய்வாம்.

5. மூவுலகும் பொருள்விரிவு முத்தியொடு
புத்தியருண் முறைமை தானும்
மேவுபவ முதற்றொழிலு மெய்ந்நூலு
மூர்த்திதலந் தீர்த்தம் வேறும்
யாவுமரு ளாலுருவு கொண்டிலதே
வுன்னுருவாய் நவில்வ தெல்லாந்
தேவியதன் மயமாகுஞ் சிவகாம
சவுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம்.

6. அட்டவடி வாயெங்கு மவையவமா
யாறுறுக் கப்பா லாகிப்
பட்டவிருள் கடந்தும்பர் பரிபுரத்தாள்
எடுத்தியற்றும் பரதந் தன்னை

இட்டமொடு கண்டுயிர்க ளிடரகற்றி
யன்பருளி யெந்தை பாலிற்
சிட்டருளம் பிரியாத சிவகாம
சவுந்தரியைச் சிந்தை செய்வாம்.

---

6. ஆருறு - முப்பத்தாறு தத்துவங்கள்.

முப்பத்தாறு தத்துவங்கள் உலகமாகத் தோன்றுகின்றன. தோன்றும் உலகம் அநித்யம். உலகத் தோற்றத்துக்கு ஆதாரமான அந்தத் தத்துவங்கள் பிரளய காலம் வரை நித்யமானவை. பிரளய காலத்தில் மாயையில் அவை மறைந்து விடுகின்றன. மூலப் பொருளாகப் படைப்புத் தொடங்கிப் பிரளய காலம் வரை இருந்து வெவ்வேறு தோற்றங்களைப் பெறுபவை தத்துவங்கள். தத்துவங் களான சரீரங்கள் முதலியவை மாறுதலடைபவை. அதனுல் அநித்யம். சரீரம் முதலியவை அழிவது என்பது இயற்கை நிலை யான தத்துவங்களாகப் பிரிந்து நிற்பதே. மறுபடியும் தத்துவங்கள் கூடி உருப்பெறுகின்றன. அத்தகைய தத்துவங்களுக்கு அப்பாற் பட்டவள் தேவி. அவை மாயையில் மறையும் போதும் இருப்பவள். அவைகளின் தோற்றத்திற்குக் காரணமான மூலப் பிரகிருதிக்கும் முற்பட்டவள்.

அசுத்த தத்துவம் 24, சுத்தா சுத்த தத்துவம் 7; சுத்த தத்துவம் 5. ஆக முப்பத்தாறு.

பூதங்களாவன :- பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம். ஆக 5.

ஞானேந்திரியங்களாவன : சோத்திரம், தொக்கு, சட்சு, சிங்நுவை, ஆக்கிராணம் ஆக 5.

தன்மாத்திரைகளாவன :- சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் ஆக 5.

கன்மேந்திரியங்களாவன :- வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம். ஆக 5.

அந்தக் கரணங்களாவன :- மனம், அகங்காரம், புத்தி, குணம். ஆக 4. இவை அசுத்த தத்துவம் என்று பெயர்.

சுத்தா சுத்த தத்துவம்:- காலதத்துவம், நியதி தத்துவம், கலா தத்துவம், வித்தியா தத்துவம். அராகதத்துவம், புருட தத்து வம், மூலப்பகுதி என்ற ஏழு பிரிவினதாய்ச் சுத்தமும் அசுத்தமும் கலந்த தத்துவபேதம்.

சுத்த தத்துவம்:- ஈசுரம், சாதாக்கியம், சத்தி, சிவம். ஆக 5.

7. யாமளைநின் னிலைமையைக்காண் யாமலது
யாருணர்வார் நவையில் காட்சி
மாமறையும் புகழவற்றே மாதுநின
தருட்செய்கை யென்று மன்றுள்
தோமறநின் றுடல்புரி யெம்பிரான்
றிருவாக்காற் சொல்லா நின்ற
சேமவொளிப் பொருளாகுஞ் சிவகாம
சவுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம்.

8. பூதலத்தி னடுவாகிச் சுழிமுனையாம்
பொற்பொதுவிற் புலிபாம் பென்னும்
மாதவர்க்குந் தில்லைமூ வாயிரற்கும்
இரணிய வன்ம ருக்கும்
ஏதமற நடங்காட்டு மெந்தையுடன்
றருவயிர மென்ன வேய்ந்த
சேதனத்தை யருட்கடலைச் சிவகாம
சவுந்தரியைச் சிந்தை செய்வாம்.

---

7. யாமளை - உமை. நவை - குற்றம். தோம் - குற்றம்.

8. புலி-வியாக்கிரபாதர், இவர் மாத்யந்தின முனிவரின் புதல்வர். தில்லையின் பெருமையைத் தமது தந்தையாரிடம் கேட்டு அறிந்த இவர், தில்லையையடைந்து திருமூலட்டானரைத் தரிசித்தார். அதற்கு மேல்பால் ஒரு சிவலிங்கம் தாபித்து வழிபட்டிருந்தார். வண்டுகள் தேனை அருந்துதற்கு முன் மலர்களை எடுத்து அர்ச்சிக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு உண்டாயிற்று. அதனை நடராசப் பெருமானிடம் விண்ணப்பித்துப் பனிக் காலத்திலும் கூட மரங்களில் வழுக்காமல் பிடித்துக் கொண்டு ஏறுதற்குப் புலிக்கால் புலிக்கைகளையும், விடியற்காலத்தில் வழியில் செல்வதற்கும், மலர்களைப் பழுதுபார்த்து எடுப்பதற்குமாகக் கால் கை நகங்களில் கண்களும் பெற்றார். அதனால் வியாக்கிர பாதர் (புலிக்கால் முனிவர்) எனப் பெயர் பெற்றார். பாம்பு - பதஞ்சலி முனிவர்.

இரணிய வன்மன் :- இவன் கௌட நாட்டு அரசர்களில் ஒருவன். முன் பிறப்புத் தீவினையால் வெண்குட்டமடைந்து சிங்க வன்மன் என்னும் காரணப் பெயரை அடைந்தான். உலக இன்பங்களில் வெறுப்படைந்து தீர்த்தயாத்திரை செய்யத் தொடங்கித் தன் உறவினர்களோடு புறப்பட்டுப் பற்பல ஆறுகளிலும், பொய்கைகளிலும் நீராடிக் கொண்டு தில்லையையடைந்து சிவகங்கையில் மூழ்கியவுடன் குட்டம் நீங்கிப் பொன்னிறம் பெற்றான். அன்று

9. நன்மைதரு மறமாதி நான்கினையுஞ்
சனகாதி நால்வர்க் கோதி
மன்மதனை யெரித்தருள்வான் கலைமுழுது
நிறைந்தாடு மன்று கண்ட
துன்மதன்துற் றெரிசனனே முதலுயிர்க்குங்
கதிகாட்டித் துரிசு வீட்டிச்
சென்மமறுத் திடுந்தில்லைச் சிவகாம
சவுந்தரிதாள் சென்னி சேர்ப்பாம்.

10. அடியிணையுங் கொடியிடையு மருள்சுரக்குந்
தனதடமு மம்பொற் பூணு
மிடியிரியக் கதியணைய வேண்டுமவர்க்
கபயமென விளங்குங் கையும்
வடிவுடைய செவ்வாயும் வெண்ணகைமுக்
கண்ணுமலர்க் குழலு மாகச்
செடியகலத் தினம்போற்றிச் சிவகாம
சவுந்தரியைச் சிந்திப் பாமே.

திருச்சிற்றம்பலம்.

---

முதல் இரணியவர்மன் என்ற பெயர் ஏற்பட்டது. இரண்யம் - பொன். வர்மன் - க்ஷத்திரியன். தில்லையிலேயே இருந்து கொண்டு பல திருப்பணிகள் செய்து மோட்சத்தையடைந்தான்.

9. அறமாதி நான்கு - அறம், பொருள், இன்பம், வீடு.

துன்மதன் - மதுரையில் இருந்த வேள்விமான் என்னும் அந்தணன் குமரன். தீய வழியில் நடந்து ஒழுக்கம் கெட்டதனால் தந்தை வெறுக்க அரசனால் ஊரை விட்டுத் துரத்தப்பட்டுத் தில்லையில் சிவதரிசனம் செய்வாருடன் சென்று தாசி ஆடலைக் காணப் போய்ச் சிவதரிசனம் செய்து காட்டில் பாம்பு கடித்திறந்து தரிசன பலத்தால் யமபடரினின்று நீங்கி முத்தியடைந்தவன்.

துர்த்தெரிசனன் - ஒரு வேடன்: இவன் வழிபறித்துத்திரிகையில் சிதம்பரத் தலத்திற்குச் சிவதரிசனத்திற்கு வரும் அந்தணனிடம் இருந்த குடையையும் பொருளையும் பறித்து மீண்டும் அந்தணனிடம் குடையை மட்டும் கொடுத்தனன். அக்குடை பெற்ற வேதியன் வேறு ஒருவன் வெயிலில் வருந்தக் கண்டு அதைப் பிடித்த புண்ணியத்தினால் இருவரும் முத்தி பெற்றனர்.

10. மிடி - வறுமை. இரிய - கெட. செடி - துன்பம்.

## சிவகாமவல்லி விருத்தம்

1. நித்தகலி யாணசுப மங்கள சவுந்தரி
நிரந்தரி யனந்தரூபி
நிக்கிரகி யநுக்கிரகி நிரஞ்சனி தயாவதனி
நின்மலி செகரட்சகி
சுத்தபரி பூரண கிருபாகரி சதானந்தி
தூலசூட் சுமகாரணி
சூலிகுண சாலிபரி பாலியென் றனுதினந்
துதிசெய்து கதிபெறுவனே
புத்தமுத மொத்தவச னத்தியிமை யத்தரசி
பொற்புட னளித்தபுதல்வி
பொங்குபாற் கடலில்வளர் செங்கண்மால் சோதரி
புராந்தகற் கினியமனைவி
சத்தமறை யாகம புராணசாத் திரவொலி
தழைத்திடும் புலியூரில்வாழ்
சலசமக லாதவல்லி கலையில்நிரு வாகவல்லி
தலைவிசிவ காமவல்லியே

---

அடி 1. "நித்திய கல்யாணி நிரஞ்சனி"

(ஸ்ரீகாசி அன்னபூரணி அம்மை திருவருட்பா. செய். 5.)

ஆசிரியர் - சிவகாமி வல்லியே திருமகளாகவும், கலைமகளாகவும் இருக்கின்றாள் என்று அபேத சம்பந்தத்தால் குறிப்பிடுகின்றார். " செங்கமலை வெண்கமலையாய் " ஸ்ரீகாசி அன்னபூரணியம்மை திருவருட்பா.

புலியூர் :- வியாக்கிரபாத முனிவர் (புலிக்கால் முனிவர்) வழி பட்ட காரணத்தினால் சிதம்பரத்திற்குத் **திருப்புலீச்சுரம்** என்ற பெயர் ஏற்பட்டது.

2. உத்தம குணத்தின ரிணக்கமறி யாமூடன்
உட்பகை யருதமூடன்
ஒப்புரவி லாமுட னற்பரை விடாமூடள்
ஒத்தமன தற்றமூடன்
சித்தமிள காமூட னித்தநிய மாதிகள்
செய்திற மிலாதமூடன்
தீதற்ற மெய்ஞ்ஞான நெறியினிற் கனவினும்
சிந்தைசெய் யாதமூடன்
பித்தரினு மெத்தவுள றித்திரியு மூடன்வெகு
பேராசை கொண்ட மூடன்
பிரியாத சஞ்சலச் சமுசார மென்னுமொரு
பேய்பிடித் தாடுமூடன்
தத்தரப் பட்டுளந் தடுமாறு மூடனுன்
தாளினிழல் பெற்றுய்வனே
சலசமக லாதவல்லி கலையில்நிரு வாகவல்லி
தலைவிசிவ காமவல்லியே

3. வாங்குசிலை போலுடல் வளைந்தொருகை கோலூன்றி
வாயில்வெண் பல்லுநழுவி
வசனமுங் குளறியிரு விழிகளு மிருண்டுநோய்
வந்துகுடி கொண்டு வெகுவாய்த்
தீங்குதலை செய்திடச் சிறுமையெனு மொருபாவி
சேர்ந்துபெரு வாது செய்யச்
சிறுவருந் தாரமு மிகழ்ந்துநகை செய்திடத்
திரள்மூப்பு வந்து மேலிட்
டோங்குதலை கொண்டு நமனுர்வரும் போதினில்
உளம்பதை பதைக்குமுன்பே
உனதுபொற் பதநிழலில் வருகவென் றருள்புரிந்
டய்யும்வகை செய்யவேணுந்

---

அடி 4. தத்தரம் - நடுக்கம்.

தாங்குதலே யுனேயன்றி வேறில்லே போதுமிச்
சஞ்சலச் சுகமம்மனே
சலசமக லாதவல்லி கலேயில்நிரு வாகவல்லி
தலேவிசிவ காமவல்லியே.

4. காளேவய தோய்ந்துமெய்க் கட்டழ கழிந்துநற்
கல்விமுத லானவெல்லாங்
கைவிட்டு மையிட்ட கண்மாதர் புன்முறுவல்
காட்டக் கடும்பிணியெலாம்
வேளேயிது வெனவந் தடர்த்திடர் படுத்திட
மெலிந்துதடு மாறுமுனமே
வினேயேனு முன்பதப் போதினிழல் பெற்றுலக
வேதனே யொழிந்துய்வனே
மூளேதசை யென்புதோல் போர்த்தவுட லாசையை
முனிந்துசிவ யோகத்திலே
முயலுமெய் யன்பரிரு வினேவலே யறுத்துமேல்
முத்திக்கு வித்தாமலர்த்
தாளேயே தருமொரு தயாபரி பராபரி
சகாயிமக மாயியாயி
சலசமக லாதவல்லி கலேயில்நிரு வாகவல்லி
தலேவிசிவ காமவல்லியே.

5. ஆலவிட மோருரு வெடுத்துக் கடாவேறி
அந்தக னெனும்பேர்தரித்
தழல்விடுஞ் சூலமும் பாசமுங்கைப்பிடித்
தாருயிர் குடித்திடவருங்
காலமற வாமலரை நாழிதரி யாமலென்
கண்காண வெள்ளே விடைமேற்
கண்ணுதலும் நீயும்வந் தஞ்சலஞ்ச லென்று
காத்தருள வேணுமம்மா

---

3. நமனுர் - இயமன்.
4. மெய்க்கட்டழகு - உடலழகு. முனிந்து - வெறுத்து.

மூலமென வோலமிடு மானையைக் காத்தருள்
முராரிதிரு மால்சோதரி
மூதண்ட பகிரண்ட பிரமாண்ட மும்பெற்ற
முதல்விமலை யுதவுபுதல்வி
சாலவுமெய் யன்பர்க ளுளக்கமல மகலாது
சஞ்சரித் திடுமன்னமே
சலசமக லாதவல்லி கலையில்நிரு வாகவல்லி
தலைவிசிவ காமவல்லியே.

6. வீணுரை வாரப்ர பஞ்சப்பொய் வாழ்வில்மதி
மெத்தவு மயங்கிமூழ்கி
விழலுக்கு மூன்றுதுலை யிட்டிறைப் பார்கள்போல்
வீணுக் குழைத்துழைத்து
நாணும லின்னமதி லேயலைப் புண்டுவீண்
நாள்பல கழிக்குமென்னை
நல்லவ ரிடத்தினி லடுத்தவர்கள் சொல்வழி
நடந்துநன் னெறியறிந்திட்
டூணுசை கொண்டுழலு முடலாசை தனையொழித்
தொழியாத சுகமளிக்கும்
உன்பதாம் புயநிழலில் வந்துசே ரத்திரு
வுளங்கனிந் தருள்செய்குவாய்

---

5. ஆலவிடம்-ஆலகாலவிஷம். அந்தகன்-யமன். கண்ணுதல்-பரமசிவன். அஞ்சல் அஞ்சல் - அடுக்குத்தொடர். "வவ்விய பாகத் திறைவரும் நீயும்" (அபிராமி அந்தாதி. செய். 18). "சிறக்கும் கமலத்திருவே" (அபிராமி அந்தாதி. செய். 89). மூலம் என - ஆதிமூலமே என. ஓலம்-சத்தம். ஆனை-கஜேந்திரன். மூதண்டம்-பிரமாண்டம். "மூதண்ட வேதண்ட கோதண்ட" (மீ. பி. த. சப். 1) பகிரண்டம் - வெளியண்டம் "மல்லாண்ட தடக்கை யாற்பகிரண்ட மகப்படுத்த காலத்து" (திவ். பெரிய திருமொழி. 11. 6. 2) "பகிரண்ட மூதண்டம்" (சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ் : செய். 4.) மலையுதவு புதல்வி-இமவானுடைய மகள். உளக்கமலம்-உருவகம்.

சேனுடு முதலான வுலகெலாங் காக்குமொரு
சிறுவனைப் பெற்றகொடியே
தில்லைநட ராயர்நேயி புல்லரை யடர்த்தமாயி
செல்விசிவ காமியாயியே.

7. சாரமில் லாதசமு சாரமெனு மகலாவி
சாரத்தி லேயழுந்திச்
சந்ததமு மதிலே தலைப்பட்டு வேறுமொரு
சார்புமில் லாதலைந்திட்
டீரமில் லாதமன வஞ்சகக் கொஞ்சரோ
டிணங்கிநர கெய்துநெறிசென்
றில்லாமை நோயென்னு மிருதலைக் கொள்ளியுள்
எறும்பொத்து நன்னெறியிலே
வாரமில் லாமல்முழு மருளனாய்த் திரியுமெனை
வாவென் றழைத்துநின்றன்
மலரடிக் கடிமைசெயு மவரடிக் கடிமைசெய
வைத்துரட் சித்தருளுவாய்
தீரமில் லாமூடப் பிள்ளையைப் பெற்றவள்
சினந்துதள் ளிடுவதுண்டோ
தில்லைநட ராயர்நேயி புல்லரை யடர்த்தமாயி
செல்விசிவ காமியாயியே.

---

6. அடி 1. ஆரவாரம் - பேரொலி. "ஆரவாரஞ்செய் தனுகினரோ" (கந்தபுராணம்.) ப்ரபஞ்சம் = பிரபஞ்சம் - உலகம். மதி - புத்தி.

பதாம்புயம் = உருவகம். சேனுடு - சுவர்க்கம். ஒரு சிறுவன் - முருகக் கடவுள். கொடி - ஆகுபெயர். புல்லர் - அற்பர்,

7. சந்ததம் - எப்பொழுதும். தலைப்பட்டு - ஈடுபட்டு. ஈரமில்லாத - கருணையில்லாத. "இருதலைக் கொள்ளி உள்ளெறும் பொத்து" (திருவாசகம் நீத்தல் விண்ணப்பம் செய். 9). "இருதலைக் கொள்ளியுள் எறும் பொத்து" :—"இருதலை மின்னுகின்ற கொள்ளி மேல் எறும்பு" (திருநாவுக்கரசர் தேவாரம் செய். 731). வாரம் - அன்பு. மருளனாய் - மருட்சியுடையவனாய். மலரடி - உவமைத் தொகை.

8. ஆனுலு மம்மம்ம வென்போலு மொருபாவி
அம்புவியி லெங்குமிலேயே
அறிவற்ற பாவிநன் னெறியற்ற பாவியில்
லறமுறையி லரியபாவி
மானுர்கள் வழியிற் பெரும்பாவி நல்லோரை
மதியாத கொடியபாவி
வசனத்தில் நிசமற்ற மாபாவி மூவாசை
வாரியில் விழுந்தபாவி
மேனுளி லிட்டுண்டு வாழாத பாவிதீ
விணையெலாஞ் செய்தபாவி
வெஞ்சின மடங்காத பஞ்சமா பாவிநோய்
வெறுமைகுடி கொண்டபாவி
சாநாள்கள் வந்துமுனை நினையாத பாவியுன்
தாளினிழல் பெற்றுய்வனே
சலசமக லாதவல்லி கலையில்நிரு வாகவல்லி
தலைவிசிவ காமவல்லியே.

9. அரிதான மானிடப் பிறவிவந் தென்னபலன்
அறியாமை தீரவில்லை
அன்பென்று சொல்லவுங் கேட்டதிலை நானெனும்
அகந்தைசற் றகல்வதில்லை
பெரிதான வெஞ்சின மடங்குதிலை யைம்புலப்
பிழைவழி யொதுங்குதில்லை
பேராசை தீரவிலை நல்லோ ரிணக்கமென்
பிறவியி லறிந்ததில்லை
பரிதாவல் போலெங் கணுந்தாவு பாழ்மனப்
பதைபதைப் போயுதில்லை

---

8. மூவாசை - மண்ணுசை, பொன்னுசை, பெண்ணுசை. வாரி - கடல். வெறுமை - தரித்திரம். சாநாள் = சாகும் நாள்.

9. பசுபாசப்பதி வினவி என்று இருக்கலாம். சரிதாதிநான்கு- சரியை, கிரியை, யோகம், ஞானம். அனம்-அன்னம் இடைக்குறை.

பசுபாசப் பதிவினைவி யெவ்வாறு நின்பதப்
பங்கயத் தடைவதம்மா
சரிதாதி நான்கையு மளந்துநின் றவருளத்
தாமரையின் வாழுமனமே
சலசமக லாதவல்லி கலையில்நிரு வாகவல்லி
தலைவிசிவ காமவல்லியே.

10. காயாதி கக்கின்ற சோறெனக் கண்டுமுன்
கட்டுவல் வினைகளெல்லாங்
கட்டறுத் தாணவக் கருவறுத் தைம்புலக்
கள்ளரையு முள்ளடக்கி
நோயாதி வெகுவிதச் சஞ்சலக் குன்றினை
நொறுக்கித் துகள்படுத்தி
நுவலருங் காமாதி யாறையுங் கூறுபட
நூறித் திடச்சித்தனாய்
வாயாத மெய்ஞ்ஞானம் வாய்த்துநன் னிலைபெற்று
மாளாத பிறவியின்னம்
வாராம லுன்பதப் போதினிழல் பெற்றுமெய்
வாழ்வுபெற் றிடுவதென்றோ
தேயாத மதியமே மாயாத நிதியமே
தெய்வமே சைவமயமாந்
தில்லைநட ராயர்நேயி புல்லரை யடர்த்தமாயி
செல்விசிவ காமியாயியே.

11. ஓயுமோ வல்வினைச் சல்லிய மடங்கலும்
ஒதுங்குமோ நானெனும்பேய்
ஒழியுமோ மூவாசை யவியுமோ வெஞ்சினம்
ஒடுங்குமோ பாழ்த்தசிந்தை

---

10. காயாதி - தனு, கரண, புவன, போகம்.
காமாதி ஆறு - காமம், குரோதம், உலோமம், மோகம், மதம், மாற்சரியம். நூறி - அழித்து. தேயாதமதி - பூர்ணசந்திரன். மாயாத - அழியாத.

மாயுமோ காமாதி மடியுமோ குணக்கேடு
மறியுமோ சிறியர்நேயம்
வளருமோ மெய்யன்பு தளருமோ வன்கண்மை
வடியுமோ துன்பவெள்ளம்
வீயுமோ வஞ்ஞானம் விளையுமோ மெய்ஞ்ஞானம்
விலகுமோ வுலகமாயை
வேறுவே றுருவெடுத் தாடலைப் படும்பிறவி
வேதனை யெனும்பெருவனந்
தீயுமோ வுனதருளை யன்றியொன் றிசையுமோர்
தெய்வமே காத்தருள்செய்வாய்
தில்லைநட ராயர்நேயி புல்லரை யடர்த்தமாயி
செல்விசிவ காமியாயியே.

12. சாகாத வரமுனைக் கேட்கவிலை யம்மனே
சாம்போது நோயிலாமற்
சங்கட மிலாமலொரு வஞ்சநம னூர்வருஞ்
சமயத்தி லஞ்சிடாமற்
கூகாவெ னக்கிளைஞர் சூழ்ந்துள மயக்கினுங்
குறியினை மறந்திடாமற்
குவலைய மயக்கமெள் ளளவுமில் லாமற்
குணங்கள்பே தித்திடாமல்
வாகான வைம்புலனு நிலைகலங் காமலுடல்
மரணவே தனையிலாமல்
மறைமுடியி னிகழுமுன் றிருவடி நிழற்குளெனை
வரவர மளித்தருள்செய்வாய்
தேகாதி முதலான மோகாதி யெவையுஞ்
சிதைத்தவ ருளத்தமுதமே
தில்லைநட ராயர்நேயி புல்லரை யடர்த்தமாயி
செல்விசிவ காமியாயியே.

---

12. அடி 2. கூகா :-
"கூகா என என் கிளைகூ டிஅழப்" (கந்தரநுபூதி. செய் 11).
"கூகாவென்று" (சிதம்பரச் செய்யுட் கோவை. செய். 75.)

13. இன்னமிப் பாழுட லெடுத்துழல வைப்பையோ
யீனர்பின் செலவிடுவையோ
இல்வாழ்க்கை யென்னுமொரு பொல்லாப்பி
லேசற்றும்
எண்ணுமல் நுழைவிப்பையோ
நன்னய மிலாக்கொடும் புல்லரோ டிணங்கிவீண்
நாள்கழித் திடவைப்பையோ
நச்சுவிழி யார்கள்மே லிச்சைகொடு பிச்சனுய்
நரகெய் திடச்செய்வையோ
அன்னமுத லானமுக் கலியெனுஞ் சனிபிடித்
தாடலைப் படச்செய்வையோ
அடுபிணி யெனும்பெருங் கொடுமைகள்
தொடர்ந்ததில்
அலைக்கழிந் திடவைப்பையோ
தென்னனரு மைப்புதல்வி யெப்படிசெய் தாலுமுன்
சித்தமென் பாக்கியமம்மா
தில்லைநட ராயர்நேயி புல்லரை யடர்த்தமாயி
செல்விசிவ காமியாயியே.

---

13. நச்சு விழியார்கள் - பெண்கள்.
அடுபிணி-வினைத்தொகை. தென்னன் -பாண்டியன். (மலையத் துவச பாண்டியன்).

# நூல் நிலைய வெளியீடுகள்

| | | ரூ. | பை |
|---|---|---|---|
| 1 | ஐங்குறுநூறு மூலமும் பழைய உரையும் | 12 | 00 |
| 2 | பதிற்றுப்பத்து மூலமும் பழைய உரையும் | 18 | 00 |
| 3 | பரிபாடல் மூலமும் பரிமேலழகர் உரையும் | 15 | 00 |
| 4 | மணிமேகலை மூலமும் அரும்பதவுரையும் | 30 | 00 |
| 5 | காஞ்சிப்புராணம் | 25 | 00 |
| 6 | இறைவாச நல்லூர்த்தல புராணம் | 18 | 00 |
| 7 | கமலாலயச் சிறப்பு | 5 | 00 |
| 8 | நவநீதப்பாட்டியல்—மூலமும் உரையும் | 2 | 00 |
| 9 | அபிநய தர்ப்பணம்—2 ஆம் பதிப்பு | 15 | 00 |
| 10 | குமாரலிங்கர் குறவஞ்சி | 6 | 00 |
| 11 | நூற்றெட்டுத்திருப்பதி அந்தாதி | 10 | 00 |
| 12 | சங்கர ராசேந்திர சோழன் உலா | 5 | 00 |
| 13 | வாட்போக்கியுலா | 7 | 50 |
| 14 | ஆதிவராகப் பெருமாள் வருக்கக்கோவை | 12 | 00 |
| 15 | அழகர் கிள்ளைவிடுதூது | 3 | 00 |
| 16 | தமிழ் விடுதூது | 3 | 00 |
| 17 | மான் விடுதூது | 1 | 00 |
| 18 | மூவரையன் விறலி விடுதூது | 12 | 00 |
| 19 | சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ் | 7 | 00 |
| 20 | தனிப்பாடல்கள் | 20 | 00 |
| 21 | அகராதி நிகண்டு | 15 | 00 |
| 22 | வடமலை நிகண்டு | 15 | 00 |
| 23 | வாகட அகராதி | 5 | 00 |
| 24 | சைவ சித்தாந்த உரைநடை | 5 | 00 |
| 25 | என் சரித்திரம் 2 ஆம் பதிப்பு | 48 | 00 |
| 26 | என் ஆசிரியப்பிரான் | 12 | 00 |
| 27 | சங்கத்தமிழும் பிற்காலத்தமிழும் | 6 | 00 |
| 28 | நான் கண்டதும் கேட்டதும் | 5 | 00 |
| 29 | உதயணன் சரித்திரச் சுருக்கம் | 2 | 00 |
| 30 | திருக்குறள் (ஸம்ஸ்கிருத மொழிபெயர்ப்புடன்) | 15 | 00 |

PRINTED BY
PELICAN INDIA
MADRAS-600 017